பொதுசன நூலகம்

விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

# VALAMPURI

நந்தா

புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்

* ரெடிமேட் ஆடைகள் * ஸ்கேட் அன் பிளவுஸ் * சல்வார் கமீஸ் * நவீன டிசைன்களில் பலரக சாறிகள்
* ஜீன்ஸ் துணிகள் * அழகு சாதனப் பொருட்கள்

போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்வீதி, மானிப்பாய்

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி03 ஞாயிற்றுக்கிழமை (20.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 305



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமான மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும், இளம்பரிதி உரையாற்றுவதையும், பேராளர்களையும் படங்களில் காணலாம்.

## முஸ்லிம்களின் உரிமையை பாதுகாக்க அரசு தவறிவிட்டது

# நோர்வே அரசாங்கத்தின் தலையீட்டினால்

# முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது

## அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்ல எச்சரிக்கை

(கொழும்பு)

**நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகள் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு தவறியுள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் நெடுஞ்சாலைகள், அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.**

அவரது எச்சரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் முஸ்லிம் மக்களுக்கு தீங்கு இழைக்கப்பட்டது போன்று நோர்வேக்காரரினது தலையீட்டின் மூலமும் அநீதி இழைக்கப்பட்டு விடுமா என்பது பற்றி தீவிரமாக ஆலோசிக்க வேண்டிய கட்டத்தில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

சமாதான முன்னெடுப்புக்கள் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே போரை ஏற்படுத்தி விடுமோ என்றும் முஸ்லிம்கள் சந்தேகிக்கின்றனர். இப்பொழுது இருந்தேனும முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், முஸ்லிம்களின் சுய நிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கமும, நோர்வே அனுசரணையாளர்களும்

(10ம்பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர் கடத்தல் வி[illegible]காரம்

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி மீது பொலிஸார் சந்தேகம்

(கொழும்பு)

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேறகொண்டு வரும் பொலிஸார் கடத்தல் சம்பவத்திற்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து பிரஸ்தாப பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்து விசாரிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அக்கரைப்பற்றில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர் குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ந)

## ஜனாதிபதியும் - பிரதமரும்

## கலை - இலக்கிய சுவை ததும்பும் மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

**அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு ... காங்கிரஸ் தவிசாளரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஏ.எல். எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.**

அவரது எச்சரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் முஸ்லிம் மக்களுக்கு தீங்கு இழைக்கப்பட்டது போன்று நோர்வேக் காரரினது தலையீட்டின் மூலமும் அநீதி இழைக்கப்பட்டு விடுமா என்பது பற்றி தீவிரமாக ஆலோசிக்க வேண்டிய கட்டத்தில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

சமாதான முன்னெடுப்புக்கள் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே போரை ஏற்படுத்தி விடுமோ என்றும் முஸ்லிம்கள் சந்தேகிக்கின்றனர். இப்பொழுது இருந்தேனும முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், முஸ்லிம்களின் சுய நிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கமும, நோர்வே அனுசரணையாளர்களும்

(10ம்பக்கம் பார்க்க)

முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேறகொண்டு வரும் பொலிஸார் கடத்தல் சம்பவத்திற்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் கொண்டுள்ளனர்.

விசாரிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அக்கரைப்பற்றில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர் குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ந)

# ஜனாதிபதியும் - பிரதமரும் தேர்தலுக்கு தயாராகின்றனர்

## தேசிய அரசை அமைக்க சிலர் முயற்சி

(நமது நிருபர்)

**பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும் இரகசியமான முறையில் தயாராகி வருகின்றன.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் கொண்டுவரப்பட்ட 19வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கெதிரான மனுக்கள் தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை அடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் ஒன்று நடைபெறலாம் என்ற ஊகங்களின் மத்தியில் இரு பெரும் அரசியல் கட்சிகளும் பொதுத் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வழி செய்யும் 19வது அரசியல் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என்று நீதிமன்றம் தெரிவித்திருப்பதை அடுத்தே இந்த அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணி நேற்றிரவு கூடி ஆராய்ந்துள்ளது.

இதனை அடுத்து இம் மாதம் 22ம் திகதி நுகேகொடையில் இது தொடர்பாக மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கும் ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசிய

(10ம் பக்கம் பார்க்க)

# கலை - இலக்கிய சுவை ததும்பும் மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

## நேற்று எழில்மிகு ஆரம்பம்

(நமது நிருபர்கள் டொரிங்டன் ரீ.ரீ.மயூரன்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும், தமிழ்த் தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்தும் “மானுடத்தின் தமிழ்க் கூடல் -2002” என்னும் மாபெரும் தமிழ் கலை இலக்கிய மாநாடு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது.

மாநாட்டில் தமிழர் தாயகப் பிரதேச அறிஞர் பெருமக்கள், தென்னிலங்கை அறிஞர்கள் மற்றும் தமிழக அறிஞர்கள் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் எனத் திரண்டிருந்த கல்விச் சமூகத்தவர்களால் மண்டபம் நிறைந்திருந்தது.

நான்கு நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள இம் மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று முற்பகல் 9மணிக்கு தமிழீழத் தேசியக்

(10ம்பக்கம் பார்க்க)

மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வின் படங்கள் 7ம் பக்கத்தில்

# முஸ்லிம்களுக்கான தனி அலகை அமைக்க எனது உயிரையும் தியாகம் செய்வேன்

## அம்பாறையில் அமைச்சர் ஹக்கீம்



(அம்பாறை)

முஸ்லிம் மக்களிற்கான தனிய லகு ஒன்றை அமைக்கும் கொள்கையில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் விலக மாட்டாது. முஸ்லிம் மக்களுக்கான தனியலகு ஒன்றைப் பெறுவதற்கு எனது உயிரையும் தியாகம் செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உறுதி படக் கூறியுள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற படுகொலைகளுக்குப் பின் அங்கு விஜயம் செய்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்குள்ள முக்கியஸ்தர்களைச் சந்தித்து அம்பாறை படுகொலை

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**சிறு விளம்பரம**

**கடை வாடகைக்கு**

இல: 172 (254 K.K.S; வீதியில் அமைந்துள்ள மாடிக் கடை வாடகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு அ. அலெக்ஸீஸ் ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் சமாதான நீதிவான் இல: 18, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2223358. (6123)

**ஆங்கிலக்கல்வி**

ஆண்டு 1ல் இருந்து மேற்படிப்பு வரை இலக்கணம், கடிதம், கதைக்கப் பயில, ஆங்கிலம் பயிலும் ஆண்டு 11இற்கு உட்பட்ட சகல மாணவர்கட்கு விஞ்ஞானம், கணிதம் தமிழ்ப்பாடங்கள் இலவசமாக பயிற்சி. தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 K K S வீதி, யாழ்ப்பாணம் (6130)


# போராடிச் சுதந்திரம் பெறாத அரசுகளால் தமிழரின் விடுதலை உணர்வை உணரமுடியாது!

## மானுடத்தின் தமிழ்க்கூடலில் பேராசிரியர் சிவத்தம்பி உரை

(அலுவலக நிருபர் டொறிங்ரன்)

**உரிமைக்காகப் போராடி சுதந்திரம் பெறாத இலங்கை அரசுகள் தமிழர்களின் உரிமைப் போரை வெறும் சண்டைகளாகவே கண்ணோக்குகின்றன.**

இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி, நேற்றையதினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002' முதல்நாள் விழாவில் தொடக்கவுரை ஆற்றும்போது தெரிவித்தார்;

கால் நூற்றாண்டுகளாக தமிழ் மொழிமூலமாக மானுடத்தின் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது;

மானுடவிடுதலையைநோக்கியஈழத்தமிழரின் போராட்டம்தவிர்க்க முடியாததாகியுள்ளது.

மானுடத்தின் குரல் நசுக்கப்படுகிறது; மனிதன் மனிதனாக இருக்கமுடியாதநிலை உருவெடுக்கின்றது; மனித உறவுகளைமதிக்காத தன்மைகள் எப்பொழுது ஆரம்பமாகினவோ அன்று முதல் மானுடத்தின் விடுதலைக்கான, உரிமைக்கான போராட்டமும் கருக்கட்டியது;

மானுடத்தின் விடுதலை என்பது இடர்களை எதிர்த்து பெரும்போர் செய்தல்.

உரிமைக்காகப் போராடி இந்தியா பெற்ற சுதந்திரம் இலங்கைக்குக் கிடைக்காததால் விடுதலை காணத் துடிக்கும் இனத்தின் உணர்வையும் இலங்கை அரசுகளால் உணர முடியாமல் போனது.

இந்த நாட்டில் தமிழர்களுக்கென்று ஒரு இடம் இல்லாமல் போனமை, மற்றும் மானுடத்தின் குரல் நசுக்கப்பட்டமை; இவை மானுடத்தின் விடுதலைக்கானபோராட்டத்தை உந்தித்தள்ளியது;

1948ல் மலையக மக்களின் பிரஜாவுரிமை நிராகரிப்பு, 56ல் தனிச்சிங்களச் சட்டம் இதனைத் தொடர்ந்து பல்வேறுகாலகட்டங்களில் மானுடத்தின் குரல் நசுக்கப்பட்டது; இதனை எதிர்த்துப் போராட இளைஞர்கள்திரண்டனர். அது மானுடத்தின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது.

சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், அடக்கு முறைகள் என்பவற்றுக்குஎதிரானமானுடத்தின் குரல் வெளியே வந்தது; அந்தக்குரல் இப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

சர்வாதிகாரி ஹிட்லரின் போராட்டம் மானுடத்தின் விடுதலைக்கான போராட்டமாக கொள்ளப்படவில்லை; முசோலினியின் போராட்டமும் விடுதலைக்கான அழியா இலக்கியமாக நிலைபெறவில்லை.

ஆனால் விடுதலைக்கான தமிழ்க்கூடல், கட்டறுக்கும் போராட்டம் தமிழ்மண்ணில்

1970களில் செயல்வடிவம் பெற்றது;

எமது மண்ணில் விடுதலைக்காக போராடப்புறப்பட்ட அனைத்துக்குழுக்களின் பெயர்களிலும் விடுதலை என்ற பதம் விரவிக் காணப்படுகிறது.

தற்போது எமது போராட்டத்தை, மானுடத்தின்குரலை புரிந்துகொள்ளவேண்டிய மிக முக்கியமான காலம் வந்துள்ளது.

இதனை ஊடகங்கள் மிகத் தெளிவாக வலியுறுத்தவேண்டும். ஊடகங்கள் சிலவேளை இதற்கு மாறாகவும் செயற்படமுடியும்;

உரிமைக்காகப் போராடி கூட்டாட்சியைக் கோரிய போதுகூட கூட்டாட்சியென்பது தனிநாடே என்று திரித்துக்கூறி மானுடத்தின்குரலை நசுக்கினர்,

ஊடகங்கள் மூலமாகவே பொதுமக்களை செய்திகள் சென்றடைகின்றன. ஊடகங்கள் தமக்கேற்றாற்போல் செயற்பட்டு செய்திகளை வெளியிடுவதால் சாதாரண மக்களை அது அப்படியே சென்றடைகிறது;

இவ்வாறு செயற்பட்டதால் ஏற்பட்ட தாக்கம் அல்லது அந்நியப்படுத்தல் மானுடத்தின்குரலை திரித்துக்கூறியதற்கான விளைவு இன்றும் தொடர்கிறது என்று பேராசிரியர் சிவத்தம்பி மேலும் கூறியுள்ளார்; (தி)

---

## மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002

## இரண்டாம் நாள்நிகழ்வு

(இன்று ஞாயிற்றுக்கிழமை)

### காலை

9 00-10,30 ஈகச்சுடர் ஏற்றல்

விழாச்சுடர் ஏற்றல்
திரு சுரேஸ்பிரேமச்சந்திரன்
திரு சி. சிவமகாராஜா
அமைதி வணக்கம்
வரவேற்புரை
திரு நா. தமிழன்பன்
சிறப்புரை
வெ இளங்குமரன்

10 3 -12 30 அமர்வு: நாவல்

தலைமை
திரு தி. ஞானசேகரன்
கட்டுரையாளர்கள்
திரு செ. யோகராஜா
எண்பதுகளுக்குப் பிற்பட்ட நாவல்களில் ஈழத் மிழர்களது உரிமைப்போராட்டம்
செங்கை ஆழியான்
மானுட விடுதலைநோக்கி ஈழத்துத் தமிழ் நாவல்கள்
குறிப்புரைஞர்
நந்தி

பி ப 12.3 - 1.30 மதிய இடைவேளை

### பிற்பகல்

1.30-3.0 அமர்வு - அரங்கு

தலைமை
திரு குழந்தை ம. சண்முகலிங்கம்
கட்டுரையாளர்கள்
திரு சிதம்பரநாதன்
உ + அதுகாட்டும் அரங்கு
திரு சி ஜெய்சங்கர்
பங்குபற்றல் பண்பாட்டு உருவாக்கத்தில் சமுதாய அரங்கு
குறிப்புரைஞர்
திரு க. ரதிதரன்

3.30 அமர்வு; மொழிபெயர்ப்பு

தலைமை
திரு இ. முருகையன்
கட்டுரையாளர்கள்
திரு கந்தையா ஸ்ரீகணேசன்
ஈழத்து இலக்கிய மொழிபெயர்ப்புகள், ஆங்கிலவழி தமிழுக்கும் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும்
குறிப்புரைஞர்
திரு ஐ. சாந்தன்

5.00-5.30 சிறப்புரை

திரு பா. செயப்பிரகாசம்
தமிழ் இலக்கியப் போக்கும் ஒடுக்கப்பட்டோர் இலக்கியமும்

5 30-5.45 நிறைவுரை

திரு சீ, புலித்தேவன்

6 00-8.00 கலைநிகழ்ச்சி

நாடகம்

'அக்கினிப் பெருமூச்சு'

யாழ் மாவட்டத்தில் 96-97ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற் போனோர் பற்றிய ஆற்றுகை

எழுத்துரு – நெறியாள்கை
தே, தேவானந்த்

---

## வல்லையில் பனம் விதை நருகை

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் 10 இலட்சம் பனம்விதைகள் நடுகைத்திட்ட ஆரம்ப நிகழ்வு இன்று மு. ப 10-30 மணிக்கு வல்லை முனியப்பர் ஆலய முன்றலில் நடைபெற உள்ளது.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ள இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் நிகழ்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (உ-8)

---

# பாராளுமன்றத் தேர்தலை விட இணைந்த செயற்பாடே அவசியம்

## ஈ. பி. டி. பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்புக்கான 19வது திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பையடுத்து தோன்றியுள்ள அரசியல் சூழல் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் மீண்டுமொரு தடவை நடத்தப்பட வேண்டுமா இல்லையா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது; ஜனநாயக அரசியல் வழிமுறையில்செயற்படும் அரசியல் கட்சி என்ற வகையில் எந்த நேரத்தில் எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்கு முகம் கொடுக்க எமது கட்சி தயாராகவே இருக்கின்றது,

இவ்வாறு ஈ பி டி பி யின் செயலாளர் நாயகமும் எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போதைய நோர்வே அரசின் அனுசரணையுடனும் பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்புடனும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான முயற்சிகள் பலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவது உடனடியாக அரசியல் உறுதிப்பாடற்றநிலைமையை தோற்றுவிக்கும் இது வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்து போவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்

மேலும் தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ்எந்தவொரு கட்சியும் மூன்றிலிரு பங்கு ஆசனங்களை பாராளுமன்றில் பெற்றுக்கொள்வதென்பது மிக அரிதாகவே இருக்கும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில்ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒத்துழைத்து சம்பந்தப்பட்ட சகலதரப்பையும் அரவணைத்து செயற்பட வேண்டும் என்பதையே எமது கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றது, தற்போது மீண்டுமொருபொதுத் தேர்தல் நடத்தப்பட்டாலும் கூட பாராளுமன்றில்மீண்டும் இந்த நிலையே நீடிக்கும், அத்துடன் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான கருத்துவேறுபாடுகளையப்படலாம் என்பதைக் கூட இப்போது நடத்தவுள்ள தேர்தல் உத்தரவாதப்படுத்துமா? என்பதும் கேள்விக்கு உரியதாகும்'

கடந்த பொதுத்தேர்தலின் போது கபடத்தனமான கூட்டுச் சேர்ப்புகளாலும். கள்ள வாக்குப் பலத்தினாலும் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் கையாலாகாத் தனம் தற்போது தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றது, அத்துடன் யுத்தத்தை நடத்திவந்தவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்தும் மக்களின் மத்தியில் தெளிவு பிறந்துவருகின்றது,

இந்த நிலையில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமாயின் எமது கட்சிக்கு கூடுதல்வாய்ப்புக்கள் ஏற்படுவது நிச்சயமானது. எனினும் கட்சி நலன்களைவிட மக்களின் நலன்களே முக்கியமானது என்பதால் தற்போது அரசியல் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டியைத்தவிர்த்து தேசிய முக்கியத்துவம்வாய்ந்தபிரச்சினைகளுக்கு ஒத்த கருத்துடன் ஒருமித்துச்செயற்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம், அதாவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலைவிடவும் இன்றைய பிரதிநிதிகள் யுத்தத்திற்கு நிரந்தரமான முடிவுகட்டக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டுமெனக்கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

---

யாழ்.

போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் வர்த்தகப் பொருட்கள் அனைத்தும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றப்பட வேண்டும் இல்லையேல் அவை மாநகர சபையினரால் பலவந்தமாக அகற்றப்படும்.

இதேவேளை, ஓட்டோக்களை நிறுத்துவதற்கும் பொருத்தமான இடம்ஒன்றை விரைவில் தெரிவு செய்வது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-10)

# தமிழர்களைப் படைக்கு சேர்க்கும் முயற்சி
# இராணுவ அரசியல் நோக்கம் கொண்டது

## பாதுகாப்பு விவகாரச் செய்தியாளர் கருணாகரன்

(கொழும்பு)

தமிழ்மக்களை இராணுவத்தில் சேர்க்கும் முயற்சியானது இராணுவ, அரசியல் காரணங்களை நோக்கமாகக் கொண்டது என தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

பாதுகாப்பு விவகாரங்கள் பற்றி எழுதும் கொழும்பு பத்திரிகையாளர் கருணாகரன் பி. பி. சி. தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் பொருட்டு யாழ். குடாநாட்டில் பரவலாக விளம்பரங்கள், சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றமை குறித்தும் இவ் ஆட்சேர்ப்பின்நோக்கங்கள் அதன் விளைவுகள் பற்றியும் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

இலங்கையைப் பொறுத்த வரையில் இராணுவத்தினர் என்று கூறுகின்றபோது 'சிங்கள இராணுவம்' என்றே கூறப்பட்டும், கருதப்பட்டும் வந்தது.

ஏனெனில் இலங்கை இராணுவத்தினரில் 99 சதவீதத்தினர் சிங்களவர்கள் என்பதனாலாகும்.

சிங்கள இராணுவம் என்ற சொல்லினை விட்டு 'தமிழ்-சிங்கள இராணுவம்' என்று கூறும் வகையில் தமிழ் மக்களை இராணுவத்தில் சேர்க்க தற்போது முயற்சிக்கப்படுகிறது இது ஒரு இராணுவத் தந்திரமாகும்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தபின் பெரிய அளவில் மோதல்கள் எதுவும் இடம் பெறவில்லை; இதனால் புலிகள் தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை குறைத்து வருகின்றனர்.

தமிழ் இளைஞர்களிற்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதாக கூறி புலிகளோடு மேலும் இளைஞர்கள் சேருவதை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட யுக்தியாகவே படைக்கு தமிழ் இளைஞர்கள் சேர்க்கும் நடவடிக்கை அமைத்துள்ளது

இவ் ஆட்சேர்ப்புநடவடிக்கை யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இங்கு வாழும் மக்களிடம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றே கூறலாம்.

இங்கு தற்போது கடைப்பிடித்து வருவது வெறும் யுத்த நிறுத்தமே தவிர முழுமையான ஒரு சமாதானமல்ல.

அத்துடன், யுத்த நிறுத்தம் ஏற்பட்டு புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின் புலிகள் முழுமையாக நடமாடி வருவதால் இங்குள்ள இராணுவத்தினர் சிங்கள இராணுவம் என்ற பதத்திலேயே கூறப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, காஞ்சிரங்குடாப் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி ஏற்பட்ட வன்செயல்களுக்கு காரணமே இராணுவமும், பொலிஸாரும் என்றும், இங்குவாழும் தமிழ் சிறுபான்மையினரிற்கு படைகளில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாததே இதற்குக் காரணம் எனவும் தமிழ் கூட்டமைப்பு கூறியிருந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-10)

# தேவைக் கணிப்பீடு

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் கிராமத்தில் கடந்த வியாழனன்று நியாப்-சமூக வலுவூட்டல் திட்டத்தின் கீழ், சேவாலங்கா நிறுவனத்தினால் பங்கேற்பு கிராமிய கணக்கெடுப்பு, தேவைக் கணிப்பீடு என்பன மேற்கொள்ளப்பட்டன. (உ-75)

# 'உண்மை' வெளியீடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியில் நடைபெறவிருந்த முருகையனின் உண்மை நாடக நூல் வெளியீட்டு வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுஎதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3மணிக்கு திட்டமிட்டவாறு இடம்பெறவுள்ளது. (உ)

# காஞ்சிரங்குடா சூட்டுச் சம்பவம்
# உயர்மட்டவிசாரணைநாளைஆரம்பம்

(கொழும்பு)

அம்பாறை காஞ்சிரங் குடா விசேட அதிரடிப்படை முகாம் முன்பாக ஏழு பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, உள்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுஅதன் விசாரணைகளை நாளை ஆரம்பிக்கவுள்ளது.

இக் குழுவினர் நாளை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரையும், பிற்பகல் 2.30 மணிமுதல் 5.30 மணிவரையும் இரு அமர்வுகளாக விசாரணைகளை திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடத்தவுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் நடைபெறும் போது, வாக்கு மூலம் அளிக்க விரும்புவோர் மேற்படி நாள்களில் சமுகமளிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் இவ் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

படுகொலை தொடர்பான தமது முறைப்பாடுகளைதெரிவிக்க விரும்புவோர் 'அறை இலக்கம் 2/218 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு-7' என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவினால் நியமிக்கப்பட்ட இக் குழுவில் ஓய்வு பெற்ற விமானப்படைத்தளபதி எயார்வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக, ஓய்வு பெற்ற நீதிபதி ஒலிவர் வீரசேன மற்றும் எஸ். விவேகானந்தன் ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

இந்தக்குழுவின் விசாரணை அறிக்கை எதிர்வரும் 30 ஆம் திகதி உள்துறை அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது. (உ-8)

# குடாநாட்டில் பரவலாக மனித உரிமைக் கல்விச் செயற்றிட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு குடாநாட்டில் பல்வேறு தரப்புகளிலும் மனித உரிமைகள் தொடர்பான கல்விச் செயற்றிட்டத்தை அமுல்படுத்தி வருகிறது.

இந்த வகையில் நேற்றைய தினம் கொக்குவில் நலன்புரி நிலையத்தில் மேற்படி மனித உரிமைக் கல்விச் செயற்றிட்டம் இடம்பெற்றுள்ளது.

இன்றைய தினம் யாழ். பொலிஸ் நிலையத்திலும் நாளையதினம் வேலணைசேர் துரைச்சுவாமி மாகவித்தியாலத்திலும் மனித உரிமை கல்விச் செயற்றிட்டம் இடம் பெறவுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியான சந்திரசேகர தெரிவித்தார். (உ)

# பாடசாலை சுகாதார மன்றம்

(சுதுமலை)

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அண்மையில் பாடசாலை சுகாதாரமன்றம்அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் சுகாதாரப் பழக்க வழக்கங்களை மேம்படுத்தும் வகையில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு தோறும் பாடசாலைகளில் சுகாதார மன்றம் அமைக்கப்பட்டு வருவதுகுறிப்பிடத்தக்கது. (உ-252)

# யாழ். நகரப்பகுதி போக்குவரத்து
# நெரிசலைத் தவிர்க்க புதிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் போக்கு வரத்து நெருக்கடிகளை குறைப்பதன் பொருட்டு யாழ்.தனியார் பஸ் நிலையத்தினை முற்ற வெளிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் மேற்கொண்டுள்ளார்.

யாழ். நகரப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளை குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ். மாநகரசபையில் யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலே இது தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் மினிபஸ்கள் முற்றவெளியில்அமைக்கப்படும் தரிப்பிடத்தில் தரித்து நின்று, குறிப்பிட்டநேரஅட்டவணையின்படி தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில், வணிகர் கழக பிரதி நிதிகள், ஓட்டோ சங்கப்பிரதிநிதிகள் மினிபஸ் சங்கப் பிரதிநிதிகள், வட பிராந்திய போக்குவரத்துச் சபை பிரதிநிதிகள் யாழ். பொலிஸ்நிலையபோக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரசபை ஆணையாளர் ஆகியோர்கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன,

பருத்தித்துறை வீதி வழியாக செல்லும் மினிபஸ்கள் அனைத்தும்பஸ் நிலையத்தின் பின்பக்கமாக யாழ். மின்சார நிலைய வீதியிலும்

காங்கேசன் துறை வீதியூடாக செல்லும் மினிபஸ்கள் மின்சார நிலைய வீதியில் உள்ள சீமாட்டி புடவையகம் முன்பாகவும்

சாவகச்சேரி, கொடிகாமம் முகமாலைஆகிய இடங்களிற்கு செல்லும் மினிபஸ்கள் யாழ் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ளவைரவர் ஆலயத்திற்கு முன்பாகவும்

கச்சேரி செல்லும் மினிபஸ்கள் யாழ்.ஆஸ்பத்திரிவீதியில் ஹற்றன் நஷனல் வங்கிக்கு முன்பாகவும குறிக்கப்பட்ட நேரங்களில் வந்து தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் அது வரையும் முற்றவெளிப் பகுதியிலேயே உரிய இடங்களில் தரித்து நிற்க வேண்டும்

யாழ். வர்த்தக நிலையங்களிற்கு பொருட்களை இறக்கும் வாகனங்கள் யாழ். சத்திரத்துச் சந்தியில் இருந்து யாழ். பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வைரவர் ஆலயம் வரையான ஆஸ்பத்திரி வீதிப் பகுதியில் மு.ப. 9மணி முதல் பி.ப. 2மணிவரையும் பின்னர் மாலை 5மணிக்கு பின்பே பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட முடியும்.

இதன் போது பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களிற்கு தரித்து நிற்கும் கட்டணமாக மணித்தியாலம் ஒன்றிற்கு 10 ரூபா அறவிடப்படும்.

ஸ்ரான்லிவீதியில் பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் வாகனங்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்கள் இடது பக்கமும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களில் வலது பக்கமும் தரித்து நின்று பொருட்களை ஏற்றி இறக்க வேண்டும்.

வர்த்தக நிலையங்களிற்கு முன்பாக பொது மக்களின்

( 2ஆம் பக்கம் பார்க்க )

## பிரதமரும் - ஜனாதிபதியும்
# சகவாழ்வு அரசியலை நடத்த
# வேண்டிய அவசியம் எழுந்துள்ளது

## அமைச்சர் ராஜித சேனரட்ண

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் சகவாழ்வு அரசியலை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என காணி அமைச்சர் ராஜித சேனரட்ண தெரிவித்துள்ளார்.

சுபாரசின் சிங்கள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான அரசியல் முரண்பாடுகளைக் களைந்து சகவாழ்வு அரசியலை ஏற்படுத்த தான் முன்வந்த போது பிரதமரின் ஓரிரு பேச்சாளர்கள் தம்மை குறைத்து மதிப்பிட்டதாகவும் ராஜித சேனரட்ண தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்வதற்கு மக்கள்பிரதமர்ரணில் விக்கிரம சிங்காவுக்கு வழங்கியுள்ள ஆணையை அரசியல் யாப்பு பிரமாணங்களின் மூலம் நலிவடையச் செய்ய ஜனாதிபதிக்கு தார்மீக அதிகாரங்கள் கிடையாது.

அரசாங்கத்தின் அதிகாரங்களை பாதுகாத்துக் கொண்டு நாட்டை நிர்வகிக்கவேண்டும் என்பதேமக்களின் எதிர்பார்ப்பாகும்.

இதனை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே, அரசியல்பிரச்சினைகளை களைந்து சகவாழ்வு நடத்த அரசாங்கம் தயாரானால்: அது சாத்தியப்படாத பட்சத்தில் மீண்டும் தேர்தல் மூலம் மக்கள்ஆணையைகோர நேரிடும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலைமுன்னணியை பொறுத்தமட்டில் நாட்டைமீண்டும் ஒருதடவை ஸ்திரமற்ற நிலைக்குகொண்டு வருவதே அதன்நோக்கமாகவுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சி குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டுள்ள நிலைப்பாட்டுடன் மக்கள் விடுதலைமுன்னணிஇணங்கமுடியுமா? எனவும் அவர் கேள்விஎழுப்பியுள்ளார். (உ-8)

# ஈராக் விவகாரத்தில் அமெரிக்கா இணக்கப்பாடு

(வாஷிங்டன்)

ஈராக்மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தனது ஏகபோக அதிகாரத்தை கைவிடுவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.


ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்குத் தயாராகி வருவது குறித்து, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் நிலவி வந்த பிரேரணைப் பிரச்சினை இதன மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந் நடவடிக்கைக்கு பிரான்ஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததால், இந்தச் சிக்கல தீர்க்கப்பட்டுள்ளதுடன், ஈராக் விடயத்தில் புதிய தீர்மானம் அடங்கிய பிரேரணை ஒன்றையும் அமெரிக்கா முன்வைக்க இணங்கியுள்ளது.

இதே வேளை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் பிரான்ஸைப் போன்று அதிகாரமுள்ள ரஷ்யாவும் புதிய பிரேரணையில் தனது யோசனைகளை முன்வைக்கலாம் எனவும எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவின் முன்னைய பிரேரணைக்கு உலகளாவிய ரீதியில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில், புதிய பிரேரணைகள் குறித்து இணக்கப்பாடு காண்பதற்கு இன்னும் ஒருவார காலம் செல்லலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு-2)

# இராணுவப்படைகள் வாபஸ்
## கோபி அனான் பாராட்டு



(இஸ்லாமாபாத்)

இந்திய - பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இரு தரப்பிலும் இராணுவப் படைகளைத் திரும்ப அழைத்துக் கொள்வது என்று எடுத்துள்ள முடிவை ஐநா. தலைமைச் செயலர் கோபி அனான் பாராட்டியுள்ளார்.

இதன் மூலம் இருநாடுகளுக்கிடையேயான பதற்றம் குறைவதற்கான நடவடிக்கை விரைவில் உருவாகும் என்றும் இருநாடுகளும் தங்களுக்கிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளைத்தீர்க்கும் அமைதியான பேச்சு வார்த்தையை தொடங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் படைகளைத் திரும்பப் பெறும் முடிவைத் தொடர்ந்து, பாகிஸ்தானும் தங்கள் தரப்பு இராணுவத்தினரை திரும்பப் பெற்றுக் கொள்வது என்று முடிவு செய்திருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (சு)



ஜமைக்காவில் நடந்த தேர்தலில் புதிய பிரதமராக பீ.ஜே. பாட்டர்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அடைந்த வெற்றியின் அடையாளமாக கிங்ஸ்டனில் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது.

WORLD NEWS உலக தரிசனம்

# பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை குறித்த தீர்மானம்
### மொஸ்கோவில் இடம் பெறும் கூட்டத்தில் ஆராய்வு

(ரஷ்யா)

பயங்கரவாதற்திற்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பான அறிக்கை ஒன்று இம்மாதம் மெக்ஸிக்கோவில் இடம் பெறும் ஆசியபசுபிக் நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இவ் அறிக்கை சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில், கப்பல்கள் மற்றும் விமானங்கள் மீது தாக்குதல்காரர்கள் குறிவைப்பார்களென தாய்வான பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய பசுபிக் பொருளாதார அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் பங்கு பற்றும் இக் கூட்டம் எதிர்வரும் 26ஆம்,27ஆம் திகதிகளில் மெக்ஸிக்கோவின் கடற்கரை நகரான லொஸ்க போஸில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தின் போது பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ள அதே வேளையில், பொருளாதாரத்தைப் பேணிப்பாதுகாப்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

# பாலித்தீவு குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து
# தாய்லாந்தில் பாதுகாப்பு தீவிரம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பாலித் தீவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச சம்பவங்கள் போன்று தனது நாட்டிலும் நடைபெறலாம் என்று தாய்லாந்து அச்சமடைந்துள்ளது.

இதனால் தமது நாட்டிற்கு விஜயம் செய்யும் பாகிஸ்தான, ஈரான், ஜேர்மன ஆகிய நாட்டவர்களை தீவிரமாகக் கண்காணிக்குமாறு சுங்கத் திணைக்களத்திற்கும், பொலிஸாருக்கும் உததரவிட்டுள்ளது.

இதன்படி இந்நாட்டவர்களின் கடவுச் சீட்டுக்களும், அடையாளங்களும் விமான நிலையங்களில் குடிவரவு அதிகாரிகளினால் தீவிரமாக ஆராயபபடவுள்ளன.

அத்துடன் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாட்டவர்கள் பெருமளவில் கூடும் இடங்களிலும் சோதனைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

இந்நிலையில் அல்கெய்டா இயக்கத்துடன் தொடர்பு இருக்கலாம் எனக் கூறப்படும் பாகிஸ்தான் ஈரான் மற்றும ஜேர்மன் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களைத் தீவிரசோதனைக்குட் படுத்தப்போவதாக தாய்லாந்தின் சுற்றுலாத்துறை பொலிஸ்கட்டளை அதிகாரி சலீற்நிசொன் தெரிவித்துள்ளார்.

பௌத்தத்தை பிரதான மதமாக கொண்ட தாய்லாந்திற்கு கடந்த வருடம் மட்டும் 100லட்சம் பேர் விஜயம் செய துள்ளதாகவும் இதன் காரணமாக முக்கிய இடங்களில் பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-2)



அமெரிக்காவில் நடைபெற்ற பெடரல்டக் ஸ்டெம்ப் ஓவியப் போட்டியில் ரான் லாக்யூ என்ற ஓவியர் வரைந்த இந்த புகைப்படத்திற்கு முதல் பரிசு கிடைத்துள்ளது.

## இஸ்ரேலில் 8 தீவிரவாதிகள் கைது

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கின் மேற்குக் கரையில் இஸ்ரேலியத் துருப்பினர் வீடுவீடாகத் தேடுதல் நடத்தி 8தீவிரவாத சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

நாபூல்ஸ் என்ற நகரத்தில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட முற்றுகையில் அரசாங்கத்தின் ஸ்கற்றாப் பிரிவையும் காமாஸ் இஸ்லாமியத் தீவிரவாத் அமைப்பையும் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 8பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். பிராந்தியத்தில் அமைதிகாக்குமாறு அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ள போதும் பலஸ்தீனப் பிரதேசங்கள் மீதான முற்றுகைகளை இஸ்ரேல் தொடர்ந்து வருவது குறிப்பிடத் தக்கது. (சு-2)

## பங்களாதேஷில் 165 மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்

(டாக்கா)

பங்களாதேஷில் மீனவர்கள்165 பேர் மாயமாக மறைந்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை காலநிலை அவதான நிலையம் விடுத்திருந்த எச்சரிக்கையையும்மீறி இம் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

சென்றவர்களின் படகு ஒரு சில மணிநேரங்களில் காணாமல் போயுள்ளது. இது குறித்து உடனடியாக எவரும பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை.

ஆனால் இரண்டு நாட்களாகியும் மீனவர்கள் வீடு திரும்பாததையடுத்து பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து உடனடியாகத தேடுதல்நடவடிக்கையை மேற்கொண்டதில், தத்தளித்துக் கொண்டிருந்த படகுகளிலிருந்து 40மீனவர்கள் மாத்திரமே மீட்கப்பட்டனர். ஏனையவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய செய்திவிபரம் இன்னும் வெளியாகவில்லை.

சார்க் மாநாட்டில் பங்கேற்பது பற்றிய

# அதிகார பூர்வ அறிவிப்பு விரைவில் எடுக்கப்படும்

(புதுடில்லி)

பாகிஸ்தானில் அடுத்தஆண்டு நடை பெறவுள்ள தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் கூட்டுறவு அமைப்பு (சார்க்) மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்து இன்னமும இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யஷ்வந்சிங்ஹா தெரிவித்துள்ளார்.

ராஞ்சியிலிருந்து ஹாசாரிபாக் செல்லும் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சார்க் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது பற்றி அமைச்சரவை மட்டத்தில்தான் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பதான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்

சார்க் மாநாடு நடைபெறும் திகதி இன்னமும்முடிவு செய்யப்படாத நிலையில், அதில் இந்தியா பங்கேற்பது குறித்து இப்போதே கருத்துத் கூறுவது இயலாத காரியம் என்று அவர் மேலும் தெரிவிதுள்ளார். (சு)

## மலேசியாவில் அச்சம்

(கோலாலம்பூர்)

இந்தோனேசியாவின் பாலித் தீவிலும், பிலிப்பைன்சிலும் கடந்த வாரம் இடம்பெற்ற குண்டுத தாக்குதல்களைப்போன்று மலேஷியாவிலும் இடம் பெறலாம் என மலேஷியப் பிரதமர் முகதீர் முகமட் அச்சம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அடுத்த தாக்குதலை எங்கு நடத்தப்போகிறார்கள் என்பதை அனுமானிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார் (சு-2)

# அணுஆயுதங்களை தயாரிக்கும் திட்டத்தில் வட கொரியா
### அமெரிக்க இராஜாங்க அமைச்சரகம் தெரிவிப்பு

(பியோங்யாங்)

அணுஆயுதங்களை இரகசியமாக தயாரிக்கும் திட்டங்களை தாம் வைத்திருப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது. அண்மையில் அமெரிக்காவின் சிறப்புத்தூதுவராகிய ஜேம்ஸ் ஹெலி வடகொரியாவிற்கு விஜயம் செய்தபோது இத் தகவல் தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாக அமெரிக்கரிவின் இராஜாங்க அமைச்சரகம் தெரிவித்துள்ளது.

1994ஆம்ஆண்டு வடகொரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தம்மைக் கட்டுப்படுத்த முடியாது என வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா தனது அணுமின் திட்டத்தை கைவிடும் பட்சத்தில் அந்நாட்டிற்குப் பெருமளவிலான இரண்டு நீர் மின் உற்பத்தி திட்டங்களிற்கு அமெரிகாக உதவிவழங்கும் என்று 1994ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

அணு ஆயதங்களைத் தயாரிபபதாக வடகொரியா அறிவித்ததை அடுத்து, அந்த நாட்டுடன எதுவித பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபட முடியாது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் றொஜ்ஜட் தெரிவித்துள்ளார்.

வட கொரியாவின் இவ்வறிப்பை தொடர்ந்து அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து, ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அந்நாட்டின் காங்கிரஸ் சபையுடனும் நட்புறவு நாடுகளுடனும் கலந்து ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-2)

## பிரான்ஸில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

(பாரிஸ்)

பிரான்ஸின் அரசாங்கப் பாடசாலை ,ஆசிரியர்கள் அனைவரும் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் அப்பாடசாலைகள் அனைத்தும் இயங்கவில்லை எனத்தெரிய வந்துள்ளது

ஆசிரியர்களிற்கான கொடுப்பனவுகள் வெட்டப்பட்டதை எதிர்த்தே இவ் வேலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)



தைவானைச்சேர்ந்த ஏ.மய் என்ற பொப் இசைக்கலைஞர், திருட்டு ஒளி ஒலி நாடாக்கள் வெளிவருவதைத் எதிர்த்து அந்த குழுவில் உள்ள மற்ற கலைஞர்களுடன் சேர்ந்து கண்டனம் தெரிவிக்கும் காட்சி.

# இன்று ஒரு தகவல்

## நேர்மையின் வெற்றி

வாழ்க்கையில் வெற்றி பெற என்ன வழி? இது ஒரு முக்கியமான கேள்வி. இதற்கு எல்லோரும் பொதுவாகச் சொல்கிற ஒரு பதில் 'உழைத்தால் வெற்றி பெறலாம்' என்பதுதான். வாழ்க்கையில் வெற்றி பெற உழைப்பு மட்டுமே இருந்தால் போதாது. நேர்மையும் வேண்டும் என்கிறார் பால் ஹாப்மேன். இவர் யார் தெரியுமா? இவர் ஒரு பெரிய பொருளாதார நிபுணர். இரண்டாம் உலகப்போர் முடிந்த சமயம், அப்போது இவர் அமெரிக்காவின் நிதி ஆலோசகராக இருந்தார். தன் வாழ்க்கையில் நடந்த பழைய நிகழ்ச்சி ஒன்றை அவர் சொன்னார்:

இளம் வயதில் படித்து முடித்தவுடன் அவர் வேலை தேடிக்கொண்டிருந்தார். ஒரு கால்நடை வைத்தியரிடம் போய் வேலை கேட்டார். இவர் அங்கே போன சமயத்தில் அந்த டாக்டர் தன்னுடைய பழைய கார் ஒன்றை விற்பனை செய்வதற்காக வேறுஒருவரிடம் பேரம்பேசிக் கொண்டிருந்தார். வாங்க வந்தவர் இவரிடம் அந்தக் காரைப் பற்றிய விபரம் எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். கார் நல்ல நிலைமையில் இருக்குமா என்கிற கவலை அவருக்கு.

எல்லா விபரங்களையும் கேட்டுக்கொண்டு அவர் கடைசியாகச் சொன்னார். 'டாக்டர்! இந்தக் காரை நீங்களே என்னுடைய ஊருக்கு ஓட்டிக் கொண்டு வரவேண்டியது' கார் எந்த ரிப்பேரும் ஆகாமல் என்னுடைய ஊருக்கு வந்து சேர்ந்துவிட்டது என்றால் அங்கேயே நான் பணம்கொடுத்து காரை வாங்கிக்கொள்கிறேன்' என்றார். நமது கார் அவ்வளவு தூரத்துக்கு வழியில் எந்த விதக் கோளாறும் இல்லாமல் போய்ச் சேருமா என்கின்ற சந்தேகம் டாக்டருக்கு!

அவர் என்ன செய்தார் தெரியுமா? தன்னிடம் வேலை கேட்டு வந்திருந்த இளைஞர் பால் ஹாப்மேனை அழைத்தார். 'இதோ பார்! இந்தக் காரை நீ அவருடைய ஊர் வரைக்கும் நல்ல படியாக ஓட்டிக் கொண்டு போய்ச்சேர்த்து விட்டாய் என்றால் உனக்கு நான் வேலை கொடுத்து விடுகிறேன் அது மட்டுமல்ல: கார்விற்ற தொகையில் கமிஷனும் தருகிறேன் என்ன சம்... எப்படி இருக்கிறது? உண்மையிலேயே இது நல்ல நிலையில் இருக்கிறதா? உன்னுடைய மனச்சாட்சிப்படி பதில் சொல் என்றார் இவரும் உடனே.. கார் நல்ல நிலையில் தான் இருக்கிறது... என்று சொல்ல வாயைத் திறந்தார் அதற்குள்ளே பார்வை எதிரேயுள்ள சுவர் மீதுபட்டது.

அங்கே இயேசுநாதர் படம் ஒன்றுமாட்டியிருந்தது. அதன் அடியில் எழுதியிருந்த வாசகம். 'நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையையும்... இயேசு கவனித்துக் கொண்டிருக்கிறார். அந்தவரிகளைப்பார்த்தார். உடனே கார் சரியில்லை என்கிற உண்மையை சொல்லி விட்டார். இவர் இப்படிச் சொன்னதும் அவர் இவரைமிகவும்ஆச்சரியமாகப் பார்த்தார். இவரிடமிருந்த நேர்மை அவரைச் சிந்திக்க வைத்தது உன்னுடைய நேர்மையைப் பாராட்டுகிறேன். உனக்கு கமிஷன் கிடைக்க வேண்டும் என்பதற்காகநான் இந்தக் காரை வாங்கிக் கொள்கிறேன் என்றார்.

இப் போது இவர் திகைத்துப்போய் நின்றார். மறுபடியும் அவர் சொன்னார்; 'நீ காரை ஓட்டிக் கொண்டு வரும் போதே உன்னுடைய திறமையைப்பார்த்தேன். உனக்கு விருப்பம் இருந்தால் நீ என்னிடம் வேலைக்குச் சேரலாம் என்றார்.

பால் ஹாப்மேன் அவரிடம் வேலைக்குச் சேர்ந்தார் படிப்படியாக முன்னேறினார். அமெரிக்காவின் நிதி ஆலோசகரானார். அதன் பிறகும் அவர் இந்தப் பழைய சம்பவத்தை மறப்பதில்லை. அடிக்கடி சொல்வதுண்டு.

இளைஞர்களே! இதிலேயிருந்து என்ன தெரிகிறது? வாழ்க்கையிலே முன்னுக்கு வரவேண்டும் என்றால் உழைப்பு மட்டும் போதாது. நேர்மையும் வேண்டும்! ஆனால் இந்தக்காலத்தில் சிலருடைய நேர்மை நமக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கும்.

ஒரு புத்தகக் கடை. அங்கே ஒருவர் நீண்ட நேரமாகத் தேடி, ஒரு புத்தகத்தை கையில் எடுத்தார். அதற்குப் பில்,போடச் சொன்னார் பில்போடுகிறவர், சார்! இந்தப் புத்தகம் மகா அறுவை! மகாமட்டம்! இது வேண்டாம் உங்களுக்கு., வேறு ஏதாவது பாருங்கள், என்றார். வாங்க வந்தவர் இவரை ஆச்சரியமாகப்

ஜனாதிபதி; பாதுகாப்பு அமைச்சிடம்

# முஸ்லிம் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் இளைஞர்களை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளில் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன உடனடியாக ஈடுபட வேண்டுமென்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்பு விடுத்துள்ளார்.

அக்கரைப் பற்றில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் அண்மையில் கடத்தப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

1989-1991 ஆம் ஆண்டு வரையான காலத்தில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் 29 முஸ்லிம் இளைஞர்களை சிறைப்பிடித்திருந்தனர்.

அரசு-ம்புலிகளும் கைதிகள் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள இவ்வேளையிலும் புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட முஸ்லிம் பொதுமக்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு உடனடியாக அறிவிக்குமாறும், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பாதுகாப்பமைச்சரைக் கோரியுள்ளார்.

இதேவேளை, இடம் பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் அமைப்பு மனித உரிமை ஆணைக் குழுத் தலைவருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் பிரகாரமே ஜனாதிபதி பணிப்பு விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

(இ)

## இரசி பலன்

(20-10-2002)

(ஐப்பசி 3, ஞாயிறு)

சதுர்த்தசி மு.ப.11.16 வரை

ரேவதி முழுவதும்

இராகுகாலம் 4 32-6.02

நல்லநேரம் 9.02-10.32

பூரணை விரதம், அமிர்தம்

### மேடம்

நித்திரைக் குறைவு. அதிகாரம், முயற்சி தாமதம், பிதா சிந்தை.

### இடபம்

சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்பத்தில் மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், உறவினர் வருகை.

### மிதுனம்

சுப நிகழ்ச்சி, தொழில் திட்டம், பிறர் உதவி, காரிய சித்தி.

### கடகம்

புதிய சிந்தை, இலட்சுமி கரம், காரிய தாமதம், கட்டுப்பாடு.

### சிங்கம்

எதிர்பாராத மனஸ்தாபம், உடல் சோர்வு, திருடர்பயம், திடீர் நன்மை.

### கன்னி

## புதிய 10 ரூபா தாள் புழக்கத்துக்கு வருகை

(கொழும்பு)

இலங்கை மத்தியவங்கிபுதிய 10ரூபா தாள்களை நேற்று முதல் புழக்கத்துக்கு விட்டுள்ளது.

நிதியமைச்சர் கே.என். சொக்ஸியின் கையெழுத்தும், டிசம்பர் 12 2001என்றதிகதியும் இத்தாளில் பொறிக்கப் பட்டுள்ளது.

ஏ-267190001 என்ற தொடர் இலக்கத்தில் இந் நோட்டுக்கள் அமைந்துள்ளன.

(உ-8)

## 450 இளைஞர்களுக்கு தொழில் பயிற்சிகள்

(தென்மராட்சி)

மனித வள அபிவிருத்தித் திணைக்களம் யாழ்.மாவட்டத்தில் 450 இளைஞர்களுக்கு தொழில் ரீதியான பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இதற்கென யாழ் மாவட்டத்தில் உள்ள பத்து பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தலா 45 பேர் வீதம் 450 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(உ-77)

பெற்றோல் நிரப்பு நிலையங்களை

## இந்திய நிறுவனத்துக்கு விற்பனை செய்யத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 100 பெற்றோல் நிரப்பு நிலையங்களை இந்தியக் கம்பனி ஒன்றுக்கு விற்பனை செய்ய அரசு திட்டமிட்டு வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்நிலையங்களை மதிப்பீடு செய்யும் வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்பட வில்லையாயினும் இம்மதிப்பீட்டு வேலைகள் விரைவில் ஆரம்பமாகி இவ் வருடமுடிவிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உள்ளூர் எரிபொருள் வர்த்தகத்தில் மற்றுமோர் வெளிநாட்டு நிறுவனம் பிரவேசிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

## பட்டப்படிப்பு 4 வருடங்கள்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக வர்த்தக பீடத்தில் மூன்று வருடபட்டப்படிப்பை நான்கு வருடங்களுக்கு அதிகரிக்க பல்கலைக்கழக புனரமைப்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

(உ-3)

## இயக்கமின்றி தீவகத்தில் 24 பாடசாலைகள்

அவர் என்ன செய்தார் தெரியுமா? தன்னிடம் வேலை கேட்டு வந்திருந்த இளைஞர் பால் ஹாப்மேனை அழைத்தார். 'இதோ பார்! இந்தக் காரை நீ அவருடைய ஊர் வரைக்கும் நல்ல படியாக ஓட்டிக் கொண்டு போய்ச்சேர்த்து விட்டாய் என்றால் உனக்கு நான் வேலை கொடுத்து விடுகிறேன் அது மட்டுமல்ல. காரவிற்ற தொகையில் கமிஷனும் தருகிறேன் என்ன சம்மதமா? என்று கேட்டார்.

பால்ஹப்மேன் யோசனை பண்ணினார். பிறகு சரிஎன்று சொல்லிச் சம்மதித்தார். கொஞ்சநேரத்தில் அவரும் கார் வாங்க வந்தவரும் புறப்பட்டார்கள். இவர் மிகவும் சிரமப்பட்டு. வழியில் எங்கேயும் நிறுத்தாமல் காரை ஓட்டிக் கொண்டு போய்ச் சேர்ந்து விட்டார். அவர் இவரை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளே போனார் அதன்பின்னர்கேட்டார். இப்போது சொல். இந்தக் கார் நிலைமை இப்போது ஆச்சரியமாகக் கூட இருக்கும்.

ஒரு புத்தகக் கடை. அங்கே ஒருவர் நீண்ட நேரமாகத் தேடி, ஒரு புத்தகத்தை கையில் எடுத்தார். அதற்குப்பில், போடச் சொன்னார் பில்போடுகிறவர், சார்! இந்தப் புத்தகம் மகா அறுவை! மகாமட்டம்! இது வேண்டாம் உங்களுக்கு., வேறு ஏதாவது பாருங்கள், என்றார். வாங்க வந்தவர் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார், 'உங்கள் நேர்மையைப் பாராட்டுகின்றேன். அது சரி... இந்தப் புத்தகத்தை ஏற்கனவே நீங்கள் படித்துப் பார்த்து விட்டீர்களா? என்று கேட்டார் அவர் 'அதைப்படித்து வேறுபார்க்க வேண்டுமா? என்றார் இவர். 'அப்புறம் எப்படி இது மகா மட்டம், மகா அறுவை என்று சொல்கிறீர்கள்? என்று கேட்டார் அவர். 'அதை எழுதியவனே நான்! தானே!' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வன்னிசென்றோர் வீடுகளில் வேறு ஆட்கள் இராச்சியம்

வன்னியிலும் வெளியிடங்களிலும் நீண்ட காலம் தங்கியிருந்துவிட்டு குடாநாட்டில் இருக்கும் தமது வீடுகளையும் காணிகளையும் பார்வையிட வருவோர் தமது வீடுகள், காணிகளில் வேறு ஆட்கள் குடியிருப்பது குறித்து ஆச்சரியமடைந்துவருகின்றனர்.

தமது முன் அனுமதியோ அங்கீகாரமோ பெறாது தம் மிஷ்டம் போல, தமது காணிகளிலும், வீடுகளிலும் இருப்போரை வெளியேற்ற முடியாத நிலையில் அவற்றின் உரிமையாளர்கள் சிலர் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிலை காரணமாக தமது சொந்த வீடுகள் மற்றும் காணிகளில் தாமே வசிக்கவோ அல்லது வேறு ஆட்களுக்கு விற்பனை செய்யவோ முடியாத நிலை இருப்பதாகச் சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். உ-77)

...ம், பிறர் உதவி, காரிய சித்தி.

**கடகம்**

புதிய சிந்தை, இலட்சுமி கரம், காரிய தாமதம், கட்டுப்பாடு.

**சிங்கம்**

எதிர்பாராத மனஸ்தாபம், உடல் சோர்வு, திருடர்பயம், திடீர் நன்மை.

**கன்னி**

களஸ்திர நன்மை, போசன சுகம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை.

**துலாம்**

நல்ல சம்பவம், குடும்பத்தில் மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், சத்துரு ஜெயம்.

**விருச்சிகம்**

சொத்துக்களால் கவலை, எதிர்பாராத நன்மை, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**தனுசு**

கல்வியில் ஆர்வம், பிரயாணக் கஷ்டம், முயற்சி, தாமதம், பெரியோர் உதவி.

**மகரம்**

கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை.

**கும்பம்**

தனவிரயம், வாக்கு கலகம், காரிய தாமதம், மாதர் நட்பு

**மீனம்**

பெரியோர் சந்திப்பு, போசன சுகம், காரிய அனுகூலம், ஜனவசியம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

...து.

எனினும், இந்நிலையங்களை மதிப்பீடு செய்யும் வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்பட வில்லையாயினும் இம்மதிப்பீட்டு வேலைகள் விரைவில் ஆரம்பமாகி இவ் வருடமுடிவிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படு

# இயக்கமின்றி தீவகத்தில் 24 பாடசாலைகள்

(தென்மராட்சி)

தீவகத்திலுள்ள பாடசாலைகளுள் 32 பாடசாலைகள் மிகவும் கஷ்டப் பிரதேசங்களில் இருக்கும் பாடசாலைகளாகவும், 7 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசங்களில் உள்ளனவாகவும் இனங்காணப்பட்டுள்ளன.

அதேவேளை தீவகத்தில் 24 பாடசாலைகள் இன்னமும் இயங்காமல் உள்ளன.

(உ-77)

# பட்டப்படிப்பு 4 வருடங்கள்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக வர்த்தக பீடத்தில் மூன்று வருடபட்டப்படிப்பை நான்கு வருடங்களுக்கு அதிகரிக்க பல்கலைக்கழக புனரமைப்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (உ-3)

# உதவு பொருட்கள்

(தென்மராட்சி)

வன்னியில் இருந்து வலிகாமம்மேற்குப்பகுதியில் மீள் குடியமர்ந்துள்ள 300 குடும்பங்களுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் உதவு பொருட்களை அண்மையில் விநியோகம் செய்துள்ளது. (உ-77)

அக்கரைப்பற்று இளைஞன் கடத்தல்

# பிரதமர் தலைமையில் அவசர கூட்டம்

(கொழும்பு)

அக்கரைப்பற்று இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவசர உயர் மட்டக் கூட்டம் ஒன்றை நேற்று முன்தினம் இரவு நடத்தியிருந்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கருஜெயசூரியா, கே. என். சொக்ஸி, ஜோன் அமரதுங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்றுக் கடத்தல் சம்பவம் தொடர்பாக உட்துறை அமைச்சரின் செயலாளர் யுனைட்தனது விசாரணை அறிக்கையை இக்கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார் இதனை அடுத்து அரசும் புலிகளும் மேற்கொள்ளும் சமாதான முயற்சியைக் குழப்பும் சூத்திரதாரியைக் கண்டுபிடிக்குமாறும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவை பிரதமர் ரணில் பணித்துள்ளார்.

(ம)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

3, 12 21, 30 போன்ற தேதிகளில் பிறந்து, தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானல் இவர்கள் குரு, இராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். மூன்றாகிய குரு உடல் எண்ணாகவும், நான்காகியஇராகு உயிர் எண்ணாகவும் வந்திருப்பதால் ஞானம் மிகுந்தவர் என்று கூறலாம். இளமையிலேயே பேரறிவும், பேச்சுத் திறனும் கொண்ட இவர்கள் அரசியல், அரசாங்க உத்தியோகம் போன்றவைகளில் இருப்பார்கள் அதிகம் பேசும் இவர்கள் நீதிமன்றங்களில் வழக்காடும் சிறந்தவழக்கறிஞராகவும் விளங்குவர்.

## சோதனைகள் அதிகம்

நன்றாகப் பேசிக் காரியம் சாதிப்பதில் வல்லவர். பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விட்டால் பொதுச் சேவை செய்து கொண்டு தானும் உயர்வர். ஆனல் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் வெட்டிப் பேச்சும் வீண்விவாதங்களும் செய்து கொண்டிருப்பர் பேச்சாலும், எழுத்தாலும் பொருளீட்டக் கூடிய இவர்களுக்குச் சோதனை அதிகம் வரும். பிறருடைய காரியங்களுக்காகச் சென்று மாட்டிக் கொள்ளுவார்கள். ஆனால் இவர்களுக்கு வரக்கூடிய இடர்ப்பாடுகளைத் தைரியமாகச் சமாளிப்பர். பணம் சம்பாதிப்பது கஷ்டமானதாக இருந்தாலும் பணம் இருக்கிறபோது குதூகலமாகச் செலவு செய்வார்கள்.

பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவராகவும், அலை போன்ற முடியும் கொண்ட இவர்கள் கவர்ச்சியாகக் காட்சியளிப்பர் பெண்கள் இவர்களிடம் மயங்குவர். பெண்கள் விஷயத்தில் நிதானமாகப் பழகிக்கொள்ள வேண்டும் 6எண் வருகின்ற மாதிரிப் பெயர் அமைந்திருந்தால் மது, மங்கை, சூது போன்றவற்றில் ஏதாவது ஒன்றில் மனம் லயித்து விடும். பொது ஜன உபகாரியாகவும் பலருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடனே வாழ்வர்.

## சேமிப்புக் கடினமானது

இவர்களைச் சுற்றி நண்பர்கள் இருந்து கொண்டே இருப்பர். இவருடைய உதவியும், அறிவுரையும் எல்லோருக்கும்

## தொழில்

இவர்கள் பேரம் பேசுவதாலும், பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாலும், பேச்சாலும், எழுத்தாலும், வாகனத்தாலும் பொருள் சம்பாதிக்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் பொருள் சம்பாதிப்பது மிகக் கஷ்டமானதாகிவிடும். அல்லது சம்பாதித்த பொருள் வீண் செலவாகும். கீழே குறிப்பிட்டபடி பெயர் பொருத்தமானதாகஅமைத்துக்கொள்ளவும்.

நல்ல பலன்கள் அதிகமாகக் காணப்படும்.

## எமிதீஸ்டு அணிதல் நலம்

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு 40 வயதிற்குள் தலைமுடி உதிர்ந்து விடும் சர்ம வியாதிகளும் தொற்றிக் கொள்ளும். இதிலிருந்து தப்பித்துக் கொள்ள ஆரம்பத்திலேயே எமிதிஸ்டு என்ற மோதிரக்கல்லை அணியவும் மின்னல் வேகத்தில் சிந்திக்கும் ஆற்றலுடையவர்களாதலால் கேட்கும் கேள்விகளுக்கு உடனே பதில் கூறிவிடுவர்.

## ஆர். ஐ. துரைமுருகர்

## நோய்

அதிகம் பேசுவதால் வயது ஏற, ஏற நெஞ்சுவலி வரக்கூடும். வாயு சம்பந்தப்பட்ட கோளாறுகளும், மூட்டு வலி, தலை வலி, போன்றவைகள் வந்து நீங்கும். இவர்கள் நோயிலிருந்து விடுபட 46 எண்ணில் பெயரை அமைத்துக் கொள்ள வேண்டும்.

## பெயர் அமைக்கும் முறை

குரு, இராகு ஆதிக்கம் கொண்டவர்களுக்கு பெயர் 1 என்று சூரியனிலோ, 3என்ற குருவிலோ வரவேண்டும், இந்த எண்ணிக்கையில்பெயர் அமைந்து விட்டால் புகழும் பெயரும் அந்தஸ்தும் பெற்று வீடு,வாகனம் நிலம் உயர் பதவிபோன்றவைகளை அடைவர். 21,39; 19,37 46,64, போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம், ஆனால்,வியாபாரவிலாசமும் இந்தஎண்ணிக்கையில் அமைய வேண்டும்.

## பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-3,1 யோகமான தேதிகள்-3,12, 21,30;10, 19, 28- யோகமான மோதிரக்கல்-கனக புஷ்பராகம் எமிதிஸ்டு, யோகமான நிறம்-றோஸ், ஆரஞ்சு, கத்தரிப் பூநிறம்,வெளிர் மஞ்சள், வெளிர் நீலம், ஆகாத தேதிகள் -6,15,24- ஆகாத நிறம்-பச்சை.

## உடல் எண்-3 உயிர்எண்-5

3,12,21,30 போன்றதேதிகளில் பிறந்து, பிறந்த தேதி, மாதம்,வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிரெண் 5 வருமேயானால் குரு,புதன்

சில நேரத்தில் ஊமை போலக் காட்சியளிக்கும் இவர்கள் பேச ஆரம்பித்தால் இலக்கண நயத்தோடு பிறரைக் கவரும் அளவிற்குப் பேசுவர்.

தன்னை எதிர்க்கும் எதிரிகளைச் சந்தர்ப்பம் பார்த்து மடக்கிவிடுவர் தன்னைத் தற்காத்துக் கொள்ள எப்பொழுதும் பாதுகாப்புடன் இருப்பர் புகழ்ச்சியில் மயங்காத இவர்கள், நிதானமாகவே செயல்படுவர் தனக்குப் பிடிக்காதவர்களைச் சந்தர்ப்பம் வரும் பொழுது, பிறரைத் தூண்டி விட்டுப் பழி தீர்த்துக் கொள்வர் ஆனால் தன்னைச் சார்ந்தவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரப் பாடுபடுவர்.

## தனிமையில் திட்டம்

வயது ஏற ஏறச் சர்க்கரை உப்பு போன்றவைகளைக் குறைத்துச் கொள்ள வேண்டும். இவர்களுடைய திட்டங்கள் எல்லாம் எளிதில் நிறைவேறுவதால் தெய்வ பக்தி கூடிவிடும். இவர்களது மனதில் தோன்றுவதையெல்லாம் வெளியிடாது மறைத்து விடுவர். எதையும் தனியாக இருந்தே திட்டம் போட்டுச் செயல் படுவர், ஆண்டவனைத்தவிர, மனிதர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்ற பயத்தால் எச்சரிக்கையாக இருப்பர்.

# சோதிட பலன்

## தொழில்

இவர்களுக்கு கமிஷன், ஏஜென்சீஸ் ,கல், நெருப்பு, உலோகம் சம்பந்தமான தொழில், பிறரை மகிழ்விக்கும் கலைத்தொழில்மூலம் செல்வம் சேர்ப்பர். பெயர் நன்றாக அமையா விட்டால் மேற் குறிப்பிட்ட தொழில்களெல்லாம் நல்ல பலனைத் தராது. இதனால் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

## நோய்

இவர்களுக்குமன அமைதியின்மையால வரக்கூடிய மன வியாதியும். நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, தோல்வியாதி, மூட்டுவலி போன்ற நோய்கள் வரவாய்ப்பிருப்பதால், இளம் வாசகர்கள் முன் கூட்டியே பெயரைப் பொருத்தமான எண்களில் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

## பெயர் அமைக்கும் முறை

இவர்கள் தமது பெயரைக் குரு ஆதிக்கமாகிய 21,39, போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமாகிய 14,23,41 ,50 ,59 போன்ற எண்களிலும், அமைத்துக் கொள்ளலாம் தான் செய்யும்வியாபாரவிலாசத்தையும் மேற்குறிப்பிட்ட எண்களில் பெயராக வைத்துக்கொள்ளுவதுசிறப்பாகும்.

## பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்- 3 ,5 ,9, யோமான தேதிகள்-3, 12, 21, 30;5,14, 23; 9,18, 27 யோகமான மோதிரக்கல்-எமிதிஸ்டு,வைரம், சிர்கான. யோகமான நிறம்றோஸ், ஆரஞ்சு கத்தரிப்பூ நிறம், சாம்பல்,வெளிர் நிறம்ஆகாத நிறம்பச்சை. ஆகாததேதிகள்-6,15,24.

(தொடரும்)

# புளியங்கூடல் கிராமத்தில் அபிவிருத்தி திட்டங்கள்

(ஊர்காவற்றுறை)

பட்டினிக்கெதிரான நிறுவ...

பட்டுள்ளன.

அத்துடன்,இருமலைசலகூடங்...

## வெளிநாட்டுக் கலைஞர்களின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டு தொழில்புரியும் வெளிநாட்டுக் கலைஞர்களின் ஓவிய, புகைப்பட, சிற்பக் கண்காட்சியானது றக்கா வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள திருமறைக் கலாமன்றத்திற்குச்சொந்தமானகட்டடத்தில் நாளைமுதல்31ஆம்திகதிவரையான 10 தினங்கள் தினமும் மு.ப. 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

புகைப்படக் கலைஞர்களான அலிஸ்ரர் கேர்க், டொமினிக் சன்சனி, ஓவியர்களான லெனொன் போல், பற்றிக் மொறின் மற்றும் சிற்பவியல்கலைஞர் அன்டிஸ்மித் ஆகியோரின் ஆக்கங்கள் இக்கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. (உ)

## 15 வது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்தியசாலையில்வைத்து 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 21 உத்தியோகத்தர்களின் 15 ஆவது ஆண்டு நினைவு தினம்நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் அனுட்டிக்கப்படவுள்ளது. (உ-3)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம், மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன இன்று காலை 7 மணிக்கு மன்ற தேவாரப்பாட சாலையில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரில்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## பசுந்தோகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் வினாடிவினாப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நாளை பி.ப.2.30 மணிக்குயாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பிரதான விரிவுரை மண்டபத்தில்விவசாய பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சா. சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை

இவர் ளிடம் மயங்குவர். பெண் விஷயத்தில் நிதான மாகப் பழகிக்கொள்ள வேண்டும். 6எண் வருகின்ற மாதிரிப் பெயர் அமைந்திருந்தால் மது, மங்கை, சூது போன்றவற்றில் ஏதாவது ஒன்றில் மனம் லயித்து விடும். பொது ஜன உபகாரியாகவும் பலருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடனே வாழ்வர்.

### சேமிப்புக் கடினமானது

இவர்களைச் சுற்றி நண்பர்கள் இருந்து கொண்டே இருப்பர். இவருடைய உதவியும், அறிவுரையும் எல்லோருக்கும் தேவைப்படுவதால், நண்பர்கள் இவர்களை விட்டுப் பிரிய மாட்டார்கள். இவர்கள் பேரம் பேசுவதாலும், கமிஷன் வியாபாரம் செய்வதாலும், ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பொருள்களை அனுபபுவதன் மூலமும் பணம் சம்பாதிக்கும் யோகமுடையவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், இவர்களுடைய வியாபாரம் சிறப்பானதாக மாட்டாது. இவர்களுக்கு வாகன யோகம் இருப்பதால் வாகனம் ஓட்டுவதில் ஆர்வமுள்ளவராக இருப்பர். கடல் கடந்த பயணங்களிலும், புனித யாத்திரை செய்வதிலும் ஆர்வமிக்கவராவர். இவர்கள் சம்பாதிக்கும் பணத்திற்குச் செலவு காத்துக் கொண்டிருப்பதால், சேமிப்பு என்பது சிறிது கடினமானது. பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் ஓரளவு நல்ல சேமிப்பு உண்டாகும்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் புகழ், அந்தஸ்து செல்வம், நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், வீடு, வாகனம் பெற்றுப் பலருக்கு உதவி புரியும் மனிதராக வாழ்கின்றனர்.

21,30;10, 19, 28- யோகமான மோதிரக்கல்-கனக புஷ்பராகம் எமிதிஸ்டு, யோகமான நிறம்-றோஸ், ஆரஞ்சு, கத்தரிப் பூநிறம், வெளிர் மஞ்சள், வெளிர் நீலம், ஆகாத தேதிகள் -6,15,24- ஆகாத நிறம்-பச்சை.

### உடல் எண்-3 உயிர்எண்-5

3,12,21,30 போன்றதேதிகளில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிரெண் 5 வருமேயானால் குரு, புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர், குரு. இவர்களை நேர்மையானவர்களாகவும் நாணயமுள்ளவர்களாகவும் வாழ்வதற்குத்துணையாயிருக்கும். ஆனால் புதன் மிகுந்த சுறு சுறுப்பைக் கொடுப்பதோடு பலரைவைத்து வேலை வாங்கும் ஆற்றலையும் கொடுக்கும்.

இவர்களுடைய வாழ்க்கை 32 வயதிற்கு மேல் பிரபலமடைவதோடு-வீடு, வாகனம், தொழில்நிலம்போன்றவைகள் சேரும். ஆனால் பொருத்தமானதாக அமையாவிடில்மேற்கூறிய பலன்கள் குறைவாக இருக்கும். மிகுந்தசாமர்த்தியசாலியான இவர்கள் எளிதில் எதிலும்ஏமாறமாட்டார்கள். தனக்கு எல்லோரும் அடங்கி நடக்க வேண்டும் என்று எண்ணுவார்கள்- முயற்சியால் முடியாதது எதுவுமில்லை என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வெற்றி அடைவர். சூழ்ச்சிக்காரரான இவர்கள் ஏதாவது திட்டமிட்ட வண்ணமேயிருப்பர் சிலருக்கு அமைதி குறையும் ஆரோக்கியம் கெடும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் மேற் குறிப்பிட்ட கெட்ட பலன்கள் குறைந்து இருந்தே திட்டம் போட்டுச் செயல் படுவர். ஆண்டவனைத்தவிர, மனிதர்கள் ஏமாற்றுக்காரரர்கள் என்ற பயத்தால் எச்சரிக்கையாக இருப்பர்.

யோகமான நிறம்றோஸ், ஆரஞ்சு கத்தரிப்பூ நிறம், சாம்பல், வெளிர் நிறம்ஆகாத நிறம்பச்சை. ஆகாததேதிகள்- 6,15,24.

(தொடரும்)

---

# புளியங்கூடல் கிராமத்தில் அபிவிருத்தி திட்டங்கள்

(ஊர்காவற்றுறை)

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் புளியங்கூடல் கிராமத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த வகையில், 5 விவசாயக் கிணறுகளும் 3 குடி நீர்க் கிணறுகளும் புனரமைக்கப் பட்டுள்ளன.

அத்துடன், இருமலசலகூடங்கள் அமைக்கப்பட்டும் இரு மலசலகூடங்கள் புனரமைக்கப்பட்டும் உள்ளன.

இவ்வாறான மேலும் பல அபிவிருத்தித்திட்டங்கள்மேற்கொள்ளப்படவுள்ளன.

(உ-75)

# 2 வது சுற்றுப் பேச்சு நிகழ்ச்சிநிரல் தயாரிப்பதில் இருதரப்புகளும் மும்முரம்

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலைதயாரிப்பதில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் மும்முரமாக ஈடுபட்டுவருவதாக தெரியவருகிறது.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளின்போது, முதலாவது சுற்றில் காணப்பட்ட உடன்பாடுகளை அமுல் செய்வதுகுறித்து இருதரப்பினரும் ஆராயவுள்ளனர்.

முதலாவது சுற்றுப்பேச்சு வார்த்தைகளின் போது, வடக்கு-கிழகுமாகாணங்களில் கூட்டுச்செயலணி ஒன்றை அமைப்பது, அங்கு இடம்பெயர்ந்தமக்களை மீளக்குடியமர்த்துவது, அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றியும் முடிவெடுக்கப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, முதல் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தற்போது வன்னிப் பிராந்தியத்தில் உள்ளதும், இதுவிடயமாக நோர்வேக்குழு வன்னி செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

சாய பீட மாணவர் ஒன்றியத்தின் 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் வினாடிவினாப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நாளை பி.ப.2.30 மணிக்குயாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பிரதான விரிவுரை மண்டபத்தில்விவசாய பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சா. சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் சிறப்பு விருந்தினராக விவசாய பீட பீடாதிபதி சு. இராஜதுரையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பசுந்தோகை சஞ்சிகை மதிப்புரையை வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர்திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

(உ)

### கந்தபுராண படனம் முற்றுப் பெற்றது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேரடிவீதியில்கடந்த ஆறுமாத காலங்களாக இடம் பெற்று வந்த கந்த புராண படனம் நேற்றுடன் பூர்த்தியடைந்துள்ளது.

பண்டிதர் சி. கார்த்திகேசுவின் (சேந்தன்) வழி நடத்தலில் பௌராணிகர் மு. சண்முகலிங்கம் பொருள் கூற தேரடி அடியார்களான செ. தியாகராசா, விநாயகமூர்த்தி அ. தியாகரராசா, உருத்திரபசுபதிஆகியோர் புராண படனம் செய்தனர்.

நேற்று, கந்தபுராணத்தைத் தாங்கிய வண்ணம் ஆலயத்தை வலம் வந்துதேரடியில் புராண படனம் முற்றுப் பெற்றது.

(ந-5)

# மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002
# முதலாம் நாள் காட்சிகள் (19.10.2002)


நிகழ்வு நடைபெறும் யாழ். வீரசிங்கம் மண்டபம்...


அரங்கில் சி.வி.கே.சிவஞானம், பேராசிரியர் கா.சிவத்தம்பி, கவிஞர் புதுவை இரத்தினதுரை...

## அரங்க நிகழ்வு - சிறுகதை


எழுத்தாளர் செம்பியன் செல்வன்


எழுத்தாளர் க.வில்வரத்தினம்

## தொடக்க நிகழ்வு


மங்கள விளக்கேற்றல் விநாயகமூர்த்தி பா.உ




## அரங்க நிகழ்வு - கவிதை


கவிஞர் சண்முகம் சிவலிங்கம்


கவிஞர் சோ.பத்மநாதன்


பேராளர்கள்...

படங்கள்:-
ரி.ரி.மயூரன்
கே.ஜெயகாந்தன்

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்க

# மு. கா. வகித்த பங்கை ஆட்சியாளர்

# அடிக்கடி மறந்து விடுகின்றனர்

## வன்னிமாவட்ட பா. மன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் கண்டனம்

(புத்தளம்)

**ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினது பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எந்த வித பேச்சுவார்த்தைகளையும் நடத்தாது, தாம் விரும்பிய போது தேர்தல் ஒன்றை நடத்த வேண்டுமென்ற அறிவிப்பை ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுப்பதாவது பெரும் கருத்து முரண்பாடுகளை தோற்றுவிக்கும் செயல்.**

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்;

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆற்றிய பங்களிப்பை அடிக்கடி ஆட்சியாளர்கள் மறந்து விடுகின்றனர்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசே பெற்றுக் கொடுத்தது.

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஊடகங்கள் மூலம் மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு தயாராகி வருகின்றது என்ற கருத்தை வெளியிடுவதானது, தற்போது பாராளுமன்ற பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் இருந்து மாற்றுவார்கள் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

எம்மை பாராளுமன்றம் அனுப்பிய மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற, நாம் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை நடத்தும் போது, அதனை கொச்சைப் படுத்தும் நடவடிக்கைகளை விடுத்து பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுகமான தீர்வை காண்பதே சாதுரியமானது.

முஸ்லிம்களின் தேவைகள், உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுக்கும் வேண்டுகோளுக்கு எதிராக சதித்திட்டங்கள் செய்யப்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளார். (உ)

## மின்னல் தாக்கியதில் 6பேர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை மூள்ளிப் பொத்தானை சேனைவெளிக் குளம் பகுதியில் மின்னல் தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அனைவரும் தற்போது தம்பலகாமம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அக்கரைப்பற்று பகுதியிலும் மின்னல் தாக்கியதால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர். (உ-8)

## மீன்பிடி உபகரணங்கள் இந்திய மீனவர்களால் களவாடப்படுகின்றன

(தென்மராட்சி)

மாதகல், பண்டத்தரிப்பு கடற்பரப்பில் இந்திய மீனவரின் அத்துமீறல் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாகவும்,

இதன் காரணமாக மாதகல், பண்டத்தரிப்பு மீனவர்கள் பயன் படுத்திவருகின்ற மீன்பிடி உபகரணங்கள் அடிக்கடி களவாடப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இப்பகுதிக்கு அத்து மீறிவரும் மீனவர்களைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-77)

குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட

## குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவதில் புறக்கணிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிப் பொருட்கள், ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுவதில்லை எனத் தெரிய வருகின்றது.

இதனால் அவர்களுக்கு இதுவரை எத்தகைய உதவிப் பொருட்களும் கிடைக்கவில்லை.

தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களிடம் பலதடவைகள் முறைப்பாடு செய்துள்ள போதிலும் இதுவரையும் எவ்வித பலனும் கிடைக்கவில்லையாம்.

இதேவேளை, இவ்வாறான குடும்பங்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து தாம் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதிலும் மூன்று அங்கத்தவர்கள் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்களுக்கே தமது உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனத் தமக்கு மேலிடத்தில் இருந்து அறிவுறுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள 60 கிராம சேவையாளர் பிரிவில் ஒன்று மற்றும் இரு அங்கத்தவர்கள் கொண்ட குடும்பங்கள் பல உள்ளன வாயினும் அவர்களது தேவைகள் நீண்ட காலமாகவே இனங்காணப்படாமலே இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## சிறைச் சாலையில் கஞ்சா செய்கை

வெலிக்கடை சிறைச்சாலையின் மாடி ஒன்றில் மிக நுட்பமான முறையில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்ததை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

சிறைச்சாலை காவல் அதிகாரிகள் சிலரின் ஒத்துழைப்புடன் இது நடைபெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இச் சிறைச்சாலையில் உள்ள எல் கட்டடத் தொகுதியின் மேல் மாடியிலேயே இப் பயிர்ச்செய்கை இடம்பெற்றுள்ளது. (உ-3)

## ஆசிய அபிவிருத்தி வங்கி 3.9 மில்லியன் ஒதுக்கு

(தென்மராட்சி)

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, மாமுனை ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மீனவர்களின் வீடுகள் நிர்மாணம், வீதிகள் திருத்தம், ஓய்வு அறை நிர்மாணம் ஆகியவற்றுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, 3.9 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 200 மீளக்குடியமர்ந்தகுடும்பங்கள் நன்மையடையவுள்ளன. (உ-77)

## கிழக்கு மாகாணத்தில் குறைகேள் அதிகாரி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சமாதானத்தைக் கருத்திற் கொண்டு குறைகேள் (ஒம்புட்ஸ்மன்) அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே இம் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பிரதேசத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக அடுத்த வாரம் மகாநாடொன்று நடத்தப்படவுள்ளது. இதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அழைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

### கண்காட்சி நீடிப்பு

(செம்பியன்பற்று)

யாழ்.கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான கல்விக் கண்காட்சி பலரின் வேண்டுகோளுக்கிணங்க நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது. (உ-42)

## ஒஸ்லோ மாநாட்டில் பிரதமர் பங்கேற்பார்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு அடுத்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாக எதிர்வரும் 25 ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தையில்பங்கு கொள்ளும் அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-3)

## சமுர்த்தி வங்கிகளின் பணியாளர் தெரிவு போட்டிப் பரீட்சை 29 இல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ள சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றவுள்ளவர்களுக்கான போட்டிப்பரீட்சை இம் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஏற்கனவே சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்கள் இப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உருவாக்கப்படும் ஐந்து பேர்கொண்ட சிறு குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வங்கிகளின் எண்ணிக்கை அமையவுள்ளது. (உ-3)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா மீண்டும் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

இக் கூட்டுத் தாபனத்தை தனியார் மயப்படுத்துவது குறித்து சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை ஆலோசனை அறிக்கை கடந்த புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே ஜனாதிபதி தனது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கைக்கு தாம் எந்த வகையிலும் இணங்கப் போவதில்லையென ஜனாதிபதி திட்டவட்டமாக கூறியதாக ஜனாதிபதி செயலகம் நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சில நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்ட போது மிகுந்த அவதானத்துடனே அவை தொடர்பான செயற்பாடுகள் எடுக்கப்பட்டன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்துவது அவசியம் என அமைச்சரவை கருதுமானால் முறையான கேள்விப்பத்திரம் மூலமும் மிகுந்த கவனத்துடன் செயற்படுத்தப்படுவது அவசியம் என ஜனாதிபதி கூறியதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாதெனின்
குறள்

# வலம்புரி

## அரசின் பலவீனம்

1978இல் ஜே.ஆர். ஜயவர்த்தனா கொண்டு வந்த புதிய அரசியலமைப்பு ஓர் திடமான பாராளுமன்ற அரசுக்கு அநியாயம் செய்து விட்டது. ஓர் அரசியல் கட்சி தனித்துப் பெரும்பான்மைப் பலம்பெற்று தனது சொந்தக்காலில் நிற்க முடியாதவாறு பாராளுமன்ற ஆட்சிநிலைபோய் விட்டது.

இந்நிலைமை ஜே ஆரின் அரசியலமைப்பு இருக்கும் வரை தொடரவே செய்யும்.

இதனை இன்னமும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள்புரிந்துகொள்ளவில்லை.

பாராளுமன்றத்தில் ஆளும்கட்சி ஸ்திரமற்று இருப்பின் அது தமக்கு நன்மை தருமென எதிர்க் கட்சிகள் நம்புகின்றனர். இதனால் அடிக்கடி தேர்தல்கள் வருவதும், கட்சிகள் மாறிமாறி ஆட்சிக் கதிரையில் இருப்பதும் சர்வசாதாரணமாகி விட்டது.

இதில் ஆளுங்கட்சி, பலமான எதிர்க்கட்சி என்பவற்றைவிடபாராளுமன்றில் அங்கம் வகிக்கும் உதிரிக்கட்சிகள் ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இதன் விளைவாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தல் நடைபெற்று ஒரு வருட இறுதிக்குள், ஆட்சியை இழக்க நேர்ந்தது.

அதாவது ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் உதவியுடன் ஆட்சிபீடம் ஏறியதனால், முஸ்லிம் காங்கிரஸின் நடைமுறைக்குச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைத்து இடுக்கண்கொடுத்தது. அதேவேளை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கப்போவதாகவும் அறிவித்தது. இதனை ஐ.தே கட்சிதனக்குச் சாதகமாகப் பயன்படுத்த பொ. ஐ முன்னணி அரசு கலைந்துபோனது,

இப்போதும் அதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐ. தே. முன்னணி அரசுக்கு உபத்திரம் கொடுக்கத் தொடங்கி விட்டது. அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களே அரசுக்கு எதிராகச்செயற்படுகின்றனர், இதனால் ஆட்சியில் இருந்தது போதும் என்ற நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது,

# நிலையான மகிழ்ச்சியையும், இரக்கத்தையும் எதிர் நோக்கியிருப்பவர்களுக்கு மீட்பு உண்டு



## பரமபிதா காட்டிய பாதை

சமுதாயப்பணிகளைச் செய்வதற்கு பலருக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. பலர் வந்து ஈடுபடுகின்றார்கள். பலர் சாட்டுப்போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்கின்றார்கள். அதனாலே, பணிகள் இடைநடுவில் விடப்பட்டு அப்பணியின் பலனை அடைய வேண்டிய மக்கள் நிர்க்கதிக்கு ஆளாகின்றார்கள். இதனாலேஉரியவர்களை விட்டுவிட்டு வேறுஆட்களைத் தெரிவுசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இப்படியான நிலையை இயேசு ஓர் உவமை மூலம் விளக்கினார். திருமண விருந்து ஒன்றுக்கு அழைப்புக்கள் விடப்பட்டன. அழைக்கப்பட்டவர் பலர் சாட்டுப் போக்கு கூறினர். விருந்து ஏற்பாடு செய்யப்பட்டதால் சாலை ஒரங்களிலும், தெருக்களிலும் உள்ளவர்களை அழைத்து வாருங்கள் என்றார். இவ்வாறு அழைக்கப்பட்டவர் பலர் தேர்ந்து கொள்ளப்பட்டவரோ சிலரே.

### அழைக்கப்பட்ட வாழ்வு

இறைவன் எல்லோருக்கும் சந்தர்ப்பங்களைத் தருகின்றார். அதனை நாம் நல்ல முறையில் பயன்படுத்தவில்லையென்றால், அது எம்மிடம் இருந்து எடுக்கப்பட்டு தகுந்தவரிடம்கொடுக்கப்படும். எனவே, இங்கு எமது நல் நடத்தை முக்கியமானது. எமது செயல்பாடுகள் முக்கிய மானவை. திருச்சபையிலும் சமுதாயத்திலும் இந்நிலைவிதிவிலக்கல்லஅழைகப்பட்ட வாழ்வுக்குச் சான்று பகர வேண்டிய பொறுப்பானது எமது வாழ்வாலும் வாழ்க்கையாலுமாகும்.

எந்நிலையிலும்நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போது எமது வாழ்க்கையில் சஞ்சலங்கள், மனப் பாரங்கள், விரக்தி நிலைகள் தோன்றக் காரணம் இல்லாமற் போகும். ''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.'' எமக்குக் கிடைத்த ஆட்கள், பொருட்கள், வளங்கள் எல்லாம் நிறைவானவை என்ற மனநிலை வரும் வரை நாமும் அலைமோதுகின்றவர்களாகவே இருப்போம். புனித பவுல் இந்நிலை பற்றிக் குறிப்பிடும்போது ''எனக்கு வறுமையிலும் வாழத்தெரியும், வளமையிலும் வாழத் தெரியும்வயிறார உண்ணவோ. பட்டினிகிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப்பயிற்சி பெற்றிருக்கின்றேன்; எனக்கு வலுவூட்டுகின்ற (இறைவனின்) வரின் துணைகொண்டு எதையும் செய்ய ஆற்றலுண்டு(பிலி4: 12, 13) இவ்வாறான மனநிலை எம்மிலே உருவாக வேண்டும் அப்போதுதான் நாம் அழைப்பை ஏற்றுக் கொள்ளவும் செயல்படுத்தவும் முடியும்;

### பற்றுறுதி கொள்ளல்

எமதுபற்றுறுதியானதுஎதிலே இருக்கின்றதோ அதை நோக்கியே நாம்இழுத்துச்செல்லப் படுவோம் ''ஆண்டவரிடம் பற்றுறுதிகொள், அவர்உனக்கு துணை செய்வார். உன்வழிகளைச் சீர்ப்படுத்து அவரிடம் நம்பிக்கை கொள்'' (சீராக்ம் 2:6 )அப்போது மிகுதியான கைமாறு கிடைக்கும். நிலையான மகிழ்ச்சியையும் இரக்கத்தையும் எதிர்நோக்கி இருக்கவேண்டும் அப்போதே எமக்கு மீட்பு உண்டு; இல்லையேல் நாம் அழிக்கப்படுவது திண்ணம். ''சிலர் தளரா ஊக்கத்தினாலும் தன்னலமறுப்பினாலும்செல்வர் ஆகின்றனர். அவர்ளுக்குஉரியபரிசு அதுவே. (சீராக 11:18) ஆண்டவரின் ஆசியே இறைபற்றியோருக்கு கிடைக்கும் பரிசாகும்.

இறைவனின் அழைத்தல் மாபெரும் கொடையாகும். எந்நிலைக்கு அழைக்கப்பட்டுள்ளோமோ அந்நிலையில் நிலைநிற்கவேண்டும். இல்லையேல். நாம் இறைவனுக்குச் சாட்சிகூறமுடியாது. எனவே, இறைசாட்சியவாழ்வின் மூலம் எம்வாழ்வைப் புதுப்பிப் போம்.

அமல அருள்தாசன்

# தேர்தல் வன்முறை தொடர்பான விசாரணை ஐ. நா. மனிதவுரிமைக் கழகத்தில் ஆரம்பம்

## சாட்சிகள் இருவரும் ஜெனிவா சென்றனர்

(கொழும்பு)

தேர்தல் வனமுறைகளால் உள் நாட்டில் மிகுந்த பிரபலம்பெற்றவர்களானஆனை மடுவதொகுதியைச் சேர்ந்த ஐ.தே.மு.எம்.பி. பாலித ரங்கா பண்டாவும், பொ.ஐ மு.எம்.பியாகிய டீ எம். தசாநாயக்கவும் ஐ நா. மனித வுரிமைகள் கழகத்தின் முன் சாட்சியமளிப்பதற்காக ஒரே விமானத்தில் நேற்று சனிக்கிழமை ஜெனிவாவுக்குச் சென்றுள்ளனர்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பால் பாலித ரங்கா பண்டார மனுதாரராகவும் டீ.எம். தசாநாயக்க எதிர் மனுதாரராகவும் ஆணைக் குழுவினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

இருவருக்குமான விமானப் பயணச்செலவுகளையும் ஆணைக்குழுவே ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தீவைப்பு, பயமுறுத்தல், குண்டுத்தாக்குதல், கொலைகள் உட்பட 20 முறைப்பாடுகளை தான் செய்திருப்பதாகவும் அவைபற்றிய ஆணைக் குழுவின் விசாரணைகள் இன்று தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் பண்டார தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு சட்டவாளரையும் ஆணைக் குழுவின் செலவில் அழைத்துச் செல்வதற்கும் ஆணைக் குழு அங்கீகாரமளித்துள்ளது,

(உ)

## வடக்கு-கிழக்கைப் பிரிக்க முஸ்லிம் தலைவர்களுடன் இணைந்து செயற்பட சிஹல உறுமய தீர்மானம்

(கொழும்பு)

இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை தனித்தனியாக பிரிப்பதற்கு முஸ்லிம் தலைவர்களுடன் இணைந்து செயற்படுவதென சிஹல உறுமயக் கட்சி கொள்கைத்தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அம்பாறையில் முஸ்லிம்களுக்கென தனியானதொரு முஸ்லிம் நிர்வாக அலகு ஏற்படுத்தப்பட்டு முஸ்லிம்களே அங்கு வாழும் நிலை ஏற்பட்டில் அவர்கள் புலிகளின் தயவில் விடப்பட்டவர்களாவர்.

இது முஸ்லிம்களுக்கே நல்லதல்ல இது பற்றி விரிவாக முஸ்லிம் காங்கிரசுடனும் 'நுசூ' வுடனும் பேசுவதென்று மத்திய குழு தீர்மானித்திருப்பதாக சிஹல உறுமயவின் பிரசாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிழக்கில் நடைபெற்ற சம்பவங்கள் புலிகளின் தூண்டுதலால் நடைபெற்றவை. இவ்வாறு செய்வதனால் தமிழர் 'சிங்களவர்' முஸ்லிம்கள் ஒன்றாக வாழுதல் சாத்தியமில்லைஎன்பதை உலகத்திற்கு காட்ட அவர்கள் விரும்புகிறார்கள்;

இதனை அடிப்படையாக கொண்டு நோர்வேகாரர்கள் ஐ. நா. சபைக்கு மகஜர் கொடுப்பார்கள். வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கு தனி நாடு தான் ஏற்றது என்று தீர்மானம் நிறைவேற்றச் செய்வார்கள்.

இவ்வாறுதான் பாலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் பிரிந்தது என்று செய்தியாளர்களிடம் கட்சியின் செயலாளர் சம்பிகாரணவாக்க தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## தினசரி தியானம்

### உண்மை

உண்மையை எண்ணி, பேசிச் செயலாற்றுவதன் மூலம்; இந்நிலவுலகை ஒரு தெய்வலோக மாக மாற்ற முடியும். ஆனால் உண்மையின் சரியான இயல்பைக் கண்டு பிடிப்பது மிகபெரிய வேலையாகும். உண்மை மறைந்திருக்கிறது. ஒரு சமயம் ஒருவரால் உண்மையென்று ஏற்கம்படுவது இன்னொருவருக்கு உண்மையாகப் படுவதில்லை. ஆகவே, பகுத்தறியும் பழக்கத்தோடு வாழுங்கள். பொய்மையை ஒதுக்கி விட்டு, உண்மையை ஏற்கமுயற்சி செய்யுங்கள். சரியான நேரத்தில் தெளிவு தானாகவே வந்து சேரும்.

சுவாமி சிவானந்தர்

## பஸ் சேவை

(மந்திகை)

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்கு அம்பன் வரை 762 இலக்கப் பாதை ஊடாக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ், சேவையில் ஈடுபட்டுள்ளது.

பருத்தித்துறை தும்பளை வீதியூடாக அம்பன் வரை தினமும் மு.ப. 10 30 மணிக்கும் மாலை 3 30 மணிக்கும் இரு பஸ் சேவை நடைபெற்று வருகின்றது (உ-23)

# எமது மொழியின் உரிமையைப் பறிக்கும் போது அதற்கு எதிராகப் போராடுவது அவசியம்

## மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வில் கவிஞர் இன்குலாப் உரை

(நமது நிருபர்கள் ரி.ரி.மயூரன், டொறிங்ரன்)

தமிழ்ஈழமண்ணில் கால்பதிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கிருந்தது. அது இப்போது நிஜமாகிவிட்டது. ஈழத்தமிழ் உறவுகளைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கின்றேன்.

இவ்வாறு மானுடத்தின் தமிழ்க்கூடல் -2002பேராளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதந்த கவிஞர் இனகுலாப் நேற்றைய மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இம் மாநாட்டின முதல் நாள் நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த போது வரும் வழியில் கண்ட காட்சிகள் எனக்கு பேரதிர்ச்சியைத் தந்தன. அதனைக கண்ணுற்ற நான் மிகவும் மனவேதனையடைந்தேன்.

அந்தச் சோகத்தைச் சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை.

மானுடத்தின் சிறப்பென்பது அது கொண்டுள்ள மொழியேயாகும். மானுடம் கொண்டுள்ள ஆறாவது அறிவு பகுத்தறிவு என்பதில் எனக்கு ஒப்புதல் இல்லை. ஏனெனில் ஆறாவது அறிவு மொழியென்பதே எனது கருத்து. அந்த வகையில் ஒரு மொழியை ஒடுக்குவது என்பது அந்த மொழியைப் பேசுபவர்களை, மானுடத்தை ஒடுக்குவதற்கு ஒப்பானதாகும்.

இந்த நிலையில் இன்றைய மாநாட்டுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு சாலப் பொருத்தமானதாகும்.

எந்த நாடாயினும் அந்த நாட்டின் பண்பாட்டின் நிலைப்பு அதன் மொழியின் நிலையாகவே அமையும்.

ஒரு மொழியைப் பின்தள்ள முயற்சிக்கும் போது- அம்மொழி உரிமையை பறிக்கும் போது அதற்கெதிராகப் போராட முயல்வது எந்த நாட்டைப் பொறுத்தவரையிலும்இயல்பான ஒரு நடவடிக்கையாகும்.

அதுவே ஈழத்திலும் நடைபெறுகிறது.அது பலருக்குப் புரியவில்லை. எனவே அதனைப் புரியவைக்க வேண்டியது அவசியமானதாகும்.

நாம் மானுட விடுதலைக்காக போராடுவதும் மொழியுரிமைக்காகப் போராடுவதும் வேறு வேறுஅல்ல.

எங்கெல்லாம் மொழி உரிமைக்காக போராடுகிறார் களோ அவர்களை நான் வாழ்த்துவேன், வரவேற்பேன்.

உங்களுக்கு அடக்குமுறைகள் இருக்கலாம் இராணுவ வேலிகளுக்குள் இருந்து கொண்டும் இப்படியான மாநாடுகளை நடத்தக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

ஆனால் ஜனநாயக நாட்டில் நாம் வாழ்ந்தும் சிலவற்றை நாம் செய்யமுடியாதவர்களாக இருக்கின்றோம் எங்களை கட்டுப்படுத்த தடாவும், பொடாவும் இருக்கின்றது என்றும் கவிஞர் இன்குலாப் மேலும் கூறினார். (இ)

---

### ஜனாதிபதியும்

முன்னணி அமைப்பாளர்களை அழைத்து இது தொடர்பான கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா உத்தரவிட்டிருப்பதுடன் தேர்தலுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைப்பாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க புதியதொரு பொதுத் தேர்தலை விரும்பாத ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் ஒவ்வொரு தேர்தலிலும் தேர்தல் முடுவுகளையடுத்து அரசு அமைப்பதற்கு சிறுபான்மை கட்சிகளின் ஆதரவைப்பெறுவதும் அதன் மூலம் அவர்களின் அதியுட்ச கோரிக்கைகளுக்கு பெரும்பான்மையின அரசுகள் பலியாகிவருவதாகவும் இதிலிருந்து விடுபட பெரும்பான்மையினக் கட்சிகள் ஒன்றிணைந்து ஸ்திரத்தன்மையுடைய அரசு ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அரசாங்க, எதிர்க்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

தேசிய அரசு ஒன்றை அமைபபதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தலைவர்களின் முயற்சி கைகூடாமல் போனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுவதைத் தவிர்க்க முடியாதென அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

---

### கலை-இலக்கிய.......

கொடியை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் கி.பாப்பா ஏற்றி வைத்தார்.ஈகைச்சுடரினை தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியும், மாவீரர் ஒருவரின் தந்தையும் ஏற்றிவைத்தனர்.

யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற தொடக்க விழாவில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் சிறப்புரையாற்றினார்,

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வருகைதந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினருமான இரா.திருமாவளவன், கவிஞர் இன்குலாப், காற்றுக்கென்னவேலி திரைப்பட இயக்குனர் புகழேந்தி தங்கராஜ், ஓவியர் மருது மற்றும் எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவர்களுடன் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்,பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும்கலந்து கொண்டனர்.

யாழ்.மண்ணில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம் பெற்று 28 வருடங்களின் பின்னர் இடம்பெற்ற மாபெரும் தமிழ் கலை இலக்கிய விழாவாக இம் மாநாடு அமைந்துள்ளமை நிகழ்வின் சிறப்பம்சமாக உள்ளது.

அறிஞர் பெருமக்கள் கூடி தமிழுக்கு மகுடம்சூட்டி மானுட விடுதலையை தேடி ஆய்வு நடத்தும் களமாக மாநாடு அமைந்தமையும், இன்றும், நாளையும், நாளை மறுதினமும் நிகழ்வு தொடர இருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது(இ)

---

### முஸ்லிம்களுக்கு........

தொடர்டபாக ஆராய்ந்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு உறுதிமொழியை அளித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

முஸ்லிம் மக்களுக்கான தனியலகுக் கோரிக்கையில் எந்த விதமான மாற்றமும் செய்யப் போவதில்லை.இங்கு போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் அரசியல் சக்தியைத் தவறான முறையில் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். இதனால் அரசியலில் பேரம் பேசும் வலுக் குறைந்து போகும். எனவே இதனை போராட்டம் நடத்துபவரகள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-5)

---

### நோர்வே அரசாங்கத்தின்...............

முயற்சி எடுத்தல் வேண்டும்.


இந்தியஇலங்கை ஒப்பந்தத்தினால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இழப்பீடு செய்யப்படவேண்டும். வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கென்றே இந்தியாவின் தலையீட்டினால், இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது எனபது எவரும் அறிந்ததே. வடக்கு கிழக்கை இணைப்பதன் மூலமே தீர்வுகாண முயற்சிக்கப்பட்டது. ஆனால் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு, கலாசாரம், சுயநிர்ணய உரிமை உள்ளடக்கிய அபிலாசைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. இதனால் இப்பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் ஒரு தனி இனம் என்பதும், அவர்களுக்குத் தனி இன அடையாளம உண்டென்பதும் அடங்கிப் போகும் படி செய்யப்பட்டது.

வடக்கு கிழக்கு இணைப்பு தற்காலிகமானது என்றும், முஸ்லீம்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் கூறி இலங்கை அரசாங்கம் முஸ்லீம் களைச் சிறுமைப்படுத்தியது. இது தொடர்பில் இந்தியாவின் உறுதி மொழிகளை ஏற்கும்படியும் அது முஸ்லீம்களைக் கேட்டிருந்தது. ஆனால் அந்த சமாதான ஒப்பந்தத்தின் விளைவாக வடக்கு கிழக்கின் முஸ்லிம்கள் இதுவரை அனுபவித துவரும் வேதனைகள் பற்றி இப் பொழுதேனும் இந்த அரசாங்கங் களும் புரிந்திருக்க முடியும். இவ்வாறு அதாவுல்லாவின் எச்சரிக்கையை கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான டெயிலிமிரர் பிரசுரித்துள்ளது.

இதேவேளை, முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தலைமையில் கிழக்கு மாகாண தலைவர்களும் கலந்து கொண்ட அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றிருந்தது. தாம் பாராளுமன்ற பகிஷ்கரிப்பை தொடரப்போவதாகவும், இனப்பிரச்சினைத் தீர்வின் இறுதியில் முஸ்லிம்கள் அடையப்போகும் பயன்கள் யாவை என்பது பற்றி தமக்கு எழுத்துமூலம் உறுதி வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிவரும் அதாவுல்லா தலைமையிலான எம்.பிக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்களா என்பது குறித்து தெரியவில்லை. (ந)

---

பத்திரிகையாளர் நிமலராஜனின் 2வது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழமாணவர் பேரவை மண்டபத்தில் அதன் தலைவர் கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற போது நிமலராஜனின் சிறிய தந்தையார் லோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் வே.தவச்செல்வன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.




## வடமாகாண மிற்சுயி, அட்லஸ் சீமெந்து வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

**மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்து தயாரிப்பாளர்களான**

**யப்பான் டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் மற்றும் ஒரு புதிய தயாரிப்பான**

# ஹினோடே
# HINODE CEMENT

சீமெந்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதை மிக மகிழ்ச்சி உடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேலதிக விபரங்களுக்கு - ஜெசிபா ஏஜென்சி

மொத்த விலை - 435/=

T.P - 021 -2222653, 021 - 2222407

277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C/5054]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.